வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வீரமலர்

Email : news@eelanadu.lk | மலர் : 06 | 29.06.2025 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 180 | பக்கங்கள் : 16




# தமிழருக்கு வழங்கிய வாக்குறுதிகளை சட்டத்தின்படி நிறைவேற்ற வேண்டும்!

## அரசிடம் கோருகின்றார் திஸ்ஸ விதாரண



கொழும்பு, ஜூன் 29

"பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு மாற்றீடாக பிறிதொரு சட்டத்தை இயற்றுவதாக குறிப்பிடுவது முறையற்றது. நாட்டு மக்களுக்கு சிங்கள மொழியில் ஒன்றை குறிப்பிட்டு விட்டு,சர்வதேசத்துக்கு ஆங்கில மொழியில் பிறிதொன்றை குறிப்பிட்டு காலத்தை கடத்தும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது. தமிழர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை சட்டத்தின் பிரகாரம் அரசாங்கம் நிறைவேற்றவேண்டும்."

இவ்வாறு தெரிவித்துள்ளார் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண.

சமகால அரசியல் நிலைவரம் குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


அவர் மேலும் குறிப்பிட்டதாவது-

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு இந்த அரசாங்கம் முன்னேற்றகரமான எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

அதேபோன்று பயங்கரவாத தடைச் சட்டத்தையும் இரத்துச் செய்வதற்கு வெளிப்படையான தீர்மானங்கள் ஏதும் இதுவரை எடுக்கப்படவில்லை.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலைத் தொடர்ந்து மாகாண சபைத் தேர்தலை தொடர்ந்து

15



# செம்மணியில் நேற்றும் 3 எலும்புக்கூடுகள் மீட்பு

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூன் 29

செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று சனிக்கிழமை மேலும் மூன்று மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகளும் மேலும் சில சிதிலங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனித புதைகுழியில் இராண்டாம் கட்ட அகழ்வுப் பணியின் மூன்றாம் நாள் பணிகள் நேற்றைய தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டன.

நேற்றைய அகழ்வுப் பணிகளின் போது மூன்று மனித எலும்புக் கூட்டு

15

# பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்துக்கு செல்ல மீண்டும் தடை!

யாழ்ப்பாணம், ஜூன் 29

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயம் 35 வருடங்களுக்கு பின்னர் கடந்த 26 ஆம் திகதி விடுவிக்கப்பட்ட நிலையில் நேற்று மீண்டும் இராணுவத்தினால் வேலி அடைத்துத் தடை செய்யப்பட்டுள்ளது.

பலாலி இராஜ இராஜேஸ்வரி

15



# அரசிடம் இருந்து நாற்பது பில்லியன் ரூபா இழப்பீடு கோரும் ஒப்பந்த நிறுவனங்கள்!

கொழும்பு, ஜூன் 29

இலங்கை அரசாங்கத்திடம் இருந்து 40 பில்லியன் ரூபாய் இழப்பீட்டினை ஒப்பந்த நிறுவனங்கள் கோரியுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளியான அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

2022ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் திகதி இலங்கை வங்குரோத்து நிலையை அறிவித்த பின்னர் இடைநிறுத்தப்பட்ட பாரிய வளர்ச்சித் திட்டங்களுக்காக, சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனங்கள் இலங்கை அரசாங்கத்திடம் இருந்து சுமார் 4,000 மில்லியன் ரூபாய் (40 பில்லியன் ரூபாய்) இழப்பீடு கோரியுள்ளதாக அரசாங்கத்தின் உயர்மட்ட வட்டாரங்கள்

15

# ஒழுங்கமைக்கப்பட்ட 52 குற்றக் கும்பல்கள்!

கொழும்பு, ஜூன் 29

எமது நாட்டில் தற்போது 52 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஒரு மூத்த பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார் என கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளியான அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது நாட்டில் தற்போது 52 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மேல் மாகாணத்தில் அதிக எண்ணிக்கையிலான ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல்கள் செயற்பட்டு வருகின்றன.

தற்போது 52 ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல்களும் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளன என்பது தெரியவந்துள்ளது.

இருப்பினும், இந்த கும்பல்கள் ஒவ்வொன்றும் சிறிது காலம் ஒன்றாகச் செயற்பட்டு, பின்னர் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஏற்பட்ட

15

# இலங்கையில் காணாமற்போனோருக்கான நீதிக்கு சர்வதேச விசாரணையே அவசியம்!

## அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் வலியுறுத்து

நியூயோர்க், ஜூன் 29

இலங்கையில் காணாமல்போனவர்களுக்கான நீதி ஒரு சர்வதேச சுயாதீன விசாரணையையும் பொறுப்புக்கூறலையும் கோருகின்றது என அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் டொான் டேவிஸ் தெரிவித் துள்ளார்.

சமூக ஊடக பதிவில் அவர் தெரிவித்துள்ளதாவது -

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கொடுமைகள் செம்மணியில் உள்ள புதைகுழிகள் வேதனையுடன் நினைவூட்டுகின்றன. நாம் உண் மையிலிருந்து

15



# செம்மணி புதைகுழி குறித்து சர்வதேச விசாரணை தேவை!

## கனேடிய எம்.பி விஜய் தணிகாசலம்

ஒன்றாரியோ, ஜூன் 29

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செம்மணி விஜயமானது தமிழினப் படுகொலை நிகழ்த்தப்பட்ட காலப்பகுதியில் பதிவான மிகமோசமான மீறல் சம்பவங்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற, சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்படவேண்டியதன் உடனடித் தேவைப்பாட்டைக் காண்பிப்பதாக ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் சுட்டிக் காட்டியுள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற் கொண்டு கடந்த திங்கட்கிழமை

15

# ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி கடிதம் இராஜதந்திரமற்ற அணுகுமுறை!

## அரசாங்கம் கடும் விசனம்

கொழும்பு, ஜூன் 29

இலங்கை மின்சாரச் சட்டத் திருத்தம் குறித்த ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் ஜெய்க்கா என்பவற்றின் கூட்டுக் கடிதத்தை அரசாங்கம் கண்டித்துள்ளதோடு, இந்த பிரச்னையை அரசியல்மயமாக்கியது இராஜதந்திரமற்ற அணுகுமுறையாகும் என்றும் தெரிவித்துள்ளது.

வலுசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி இதனைத் தெரிவித்துள்ளார்.

மின்சார சபை சட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்கள் தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் ஜெய்க்கா என்பவை வலுசக்தி அமைச்சருக்கு கடிதம் அனுப்பியுள்ளன.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரத்தை வலுவிழக்கச் செய்யும்

15

# அரச மருந்தகங்களை நிறுவுவதற்கு திட்டம்!

கொழும்பு, ஜூன் 29

நாட்டிலுள்ள 130 இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை மருத்துவமனைகளையும், முன்னணி தனியார் மருத்துவமனைகளையும் தொடர்புப்படுத்தும் வகையில் அரச மருந்தகங்களை நிறுவுவதற்கான ஒரு திட்டம் எதிர்காலத்தில் செயற்படுத்தப்படும் என சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டியில் உள்ள அரச

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றம், பொறுப்புக்கூறல் திட்டங்களுக்கான நிதி நிறுத்தம்

## வெள்ளை மாளிகை பரிந்துரை

வாஷிங்டன், ஜூன் 29
இலங்கை உட்பட்ட பல்வேறு நாடுகளில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் பொறுப்புக் கூறல் தொடர்பில் செயல்படுத் தப்பட்டு வந்த சுமார் 24 திட் டங்களுக்கான (அமெரிக்க) நிதி வழங்கல் நடவடிக்கையை நிறுத்துவதற்கு வெள்ளை மாளிகை பரிந்துரைத்துள்ளது.

நிதியுதவியை நிறுத்த நட வடிக்கை எடுத்துள்ள திட்டங் களில் ஈடுபட்டுள்ள நாடுகளில் இலங்கை, ஈராக், சிரியா மற் றும் ரஷ்யா ஆகிய நாடுகளும் அடங்குவதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித் துள்ளது.(எ)

கடல் தொழிலுக்கு சென்ற நிலையில்

# காணாமல்போன மீனவர் நேற்றுச் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 29
யாழ்ப்பாணம் - வடம ராட்சி கிழக்கு, மணல்காடு பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை கட்டுமரத்தில் கடற் றொழிலுக்கு சென்ற இரண்டு பிள்ளைகளின் தந்தை நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட் டார்.

அதே பகுதியைச் சேர்ந்த அ. ஆனதாஸ் (வயது - 38) என்ப வரே இவ்வாறு சடலமாக மீட் கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் அதி காலையில் கட்டுமரத்தில் மீன் பிடித் தொழிலுக்காகச் சென் றார்.

வழமையாக காலை 09: 00 மணியளவில் கரை திரும்பும் குறித்த மீனவர் அன்று கரை திரும்பாத நிலையில் உறவினர் கள் படகில் தேடிச் சென்ற வேளை ஆளின்றி அவர் பய ணித்த கட்டுமரம் கடலில் மிதந்து வந்தது.


இதனை அவதானித்த மீன வர்கள் கடலட்டை தொழிலில் ஈடுபடும் படகு மோதியிருக்க லாம் என்ற சந்தேகத்தில் கட்டுமரத்தை கரைக்கு கொண்டுவந்தனர்.


இந்த நிலையில் இரண்டு நாட்கள் சுழியோடிகள் உதவி யுடன் காணால்போன மீனவரை தேடும் நடவடிக்கை யில் ஈடுபட்டனர். இந்த நிலை யில் நேற்றுக் காலை அவரது சடலம் கரையொதுங்கியது.

இது தொடர்பில் மருதங் கேணி பொலிஸார் தீவிர விசார ணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (எ-05)

35 வருடங்களின் பின்னர்

# பலாலி நாகதம்பிரான் ஆலயம் முழுமையாக விடுவிக்கப்பட்டது





யாழ்ப்பாணம், ஜூன் 29
பலாலி நாகதம்பிரான் ஆல யம் 35 வருடங்களின் பின்னர் முழுமையாக விடுவிக்கப்பட் டுள்ளது.


கோவில் அமைந்துள்ள பகுதி இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருந்து வந்தது.

கடந்த மாதம் 23 ஆம் திகதி ஆலயத்தின் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

ஆலய நிர்வாகத்தினர் மாத் திரம் சென்று வருவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், நேற்று முன் தினம் முட்கம்பி வேலிகள் அனைத்தும் அகற்றப்பட்டு ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் செய்வதற்கும் எந்த நேரத்தில் எவரும் சென்று வரக்கூடிய வகையிலான சூழல் உருவாக் கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மக்கள் ஒன்றுகூடி பொங்கல் பொங்கி வழிபட்டனர். (எ-03)

# பிரதிப் பொலிஸ்மா அதிபராக பொறுப்பேற்றார் மாரப்பன



யாழ்ப்பாணம், ஜூன் 29
யாழ்ப்பாணம் மாவட்ட பிர திப் பொலிஸ் மா அதிப ராக நிய மிக்கப்பட்ட மாரப் பன, நேற்றுக் காலை தனது கடமைகளைப் பொறுப்பேற் றார். யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ் மா அதிபராக பணியாற்றிய காளிங்க ஜெயசிங்க கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட் டுள்ளார். இந்த நிலையில் கொழும்பில் பணியாற்றிவந்த மாரப்பன யாழ்ப்பாணம் மாவட்ட புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபராக நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். (எ)

# தென்னையில் வெள்ளை ஈ தாக்கம் தேசிய பிரச்னையாக உருவெடுத்தது



யாழ்ப்பாணம், ஜூன் 29
"தென்னை மரங்களில் வெள்ளை ஈ தாக்கம் ஒரு தேசிய பிரச்னையாக உரு வெடுத்துள்ளது" - இவ்வாறு தெரிவித் துள்ளார் தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் தலைவர் சுனிமல் ஜெயக் கொடி.

தென்னை மரங்களில் வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்தல் தொடர் பான விசேட கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அர சாங்க அதிபர் அலுவலகத்தில் நடை பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தென் னைப் பயிர்ச் செய்கை சபையின் தலை வர் சுனிமல் ஜெயக்கொடி கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில், தென்னை மரங்களில் வெள்ளை ஈ தாக் கம் தொடர்பான பிரச்னை ஒரு தேசிய பிரச்னையாக உள்ளது. கிருமி நாசினி கொல்லிகளை பயன்படுத்தி இப் பிரச் னைக்குத் தீர்வு காண முடியாதுள்ளது. எனவே, இப் பிரச்னைக்கு தெளி கருவிக ளைப் பயன்படுத்தி தென்னை மரங்களை தண்ணீர் மூலம் சுத்தப்படுத்த திட்டமி டப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் இரு வாரங்களுக்கு யாழ். மாவட்டத்தில் வெள்ளை ஈ தாக்கம் அதிகமாக இனங் காணப்பட்ட சாவகச்சேரி, கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் மற்றும் உடுவில் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் கூடிய ளவிலான அதிக வலுவுள்ள தெளி கருவிகள் மூலமாக தென்னை மரங்களை கழுவும் செயல்பாட்டை வினைத்திற னாக முன்னெடுக்கவுள்ளதாக தெரிவித் தார். மேலும், இந்த செயல்பாட்டை முன்னெடுக்க அனைத்து சமூகங்களி னதும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதா கவும் கூறினார். (எ)

# பசுமை அமைதி விருதுகள் பரிசளிப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 29
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் 2024ஆம் ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுகளை வழங்கும் பரிசளிப்பு விழா இன்று 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பிற்பகல் 02. 30 மணிக்கு நடைபெறவுள் ளது.

இந்த விழாவில் கடந்த ஆண்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட சூழல், பொது அறிவுப் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்கள் சூழலியல் ஆசான் க. சி. குகதாசன் ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதுகளும், 2024ஆம் ஆண் டின் சிறந்த சூழல்நேயச் செயல்பாட்டா ளர் தாலகாவலர் மு.க. கனகராசா ஞாப கார்த்தப் பசுமை அமைதி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேலும், இவ்விழாவில் 2024ஆம் ஆண்டில் மாணவர்களிடையே நடத் தப்பட்ட வீட்டுத்தோட்டப் போட்டி யில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு மாணாக்க உழவர் மதிப்பளிப்பும், தாவரங்களை அடையாளம் காணும் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தாவரராவதானி மதிப்பளிப்பும் நடை பெறவுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமை யில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம விருந்தினராக வவுனியாப் பல்க லைக்கழகத்தின் பதில் துணைவேந்தர் பேராசிரியர் யோ. நந்தகோபன் கலந்து கொள்ளவுள்ளார். (எ-03)

# மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இரண்டு நாட்கள் நாடக விழா

யாழ்ப்பாணம், ஜூன் 29
மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நாடக விழா - 2025
ஜூலை முதலாம், இரண்டாம் திகதி களில் (செவ்வாய், புதன்) மாலை 06.00 மணிக்கு கல்லூரியின் துரைராஜா திறந்த வெளி அரங்கில் அதிபர் துரைரட்ணம் திலீப்குமார் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தின ராக கிழக்குப் பல்கலைக்கழக மட்டக் களப்பு நுண்கலைத்துறை நாடகப் பேராசிரியர் சி. ஜெயசங்கரும், சிறப்பு விருந்தினர்களாக லண்டன் ஹைதராபாத் சங்கத்தைச் சேர்ந்த தர்மரட்ணம் ரவீந்திரமோகனும் ஆறுமுகதாசன் திருமூலன் ஆகியோரும் பிரதம நடுவராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரி உபபீடாதிபதி, கலாநிதி பா. தனபாலன் ஆகியோர் கலந்து கொள்வர்.

முதலாம் நாள் ஆற்றுகைகளாக மாணிக்கர், வாகீசர் இல்ல மாணவர்க ளின் நாடக ஆற்றுகை, ஆசிரியர்களின் வள்ளி திருமணம் இசை நாடக ஆற்று கையும் இரண்டாம் நாள் நிகழ்வுகளாக சம்பந்தர், சுந்தரர் இல்ல மாணவர்களின் நாடக ஆற்றுகையும் பழைய மாணவர் களின் நாடக ஆற்றுகை என்பனவும் நடைபெறவுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி மனித புதைகுழிகள் மனிதப் பேரவலத்தின் உச்சம்!

## நாம் தமிழர் கட்சி சீமான் தெரிவிப்பு

சென்னை, ஜூன் 29

**செம்மணி மனிதப் புதைகுழிகள் மனிதப்பேரவலத்தின் உச்சம். சிங்கள இனவெறியர்களின் தமிழின அழிப்புக்கான மற்றுமொரு வரலாற்றுச் சான்று. உலக நாடுகள் இப்போதாவது மௌனம் கலைக்குமா? உரிய நீதியைப் பெற்றுத் தருமா? என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.**

ஈழத்தாயகத்தின் வடக்குப் பகுதியில் யாழ்ப்பாணம் செம்மணி - சித்துப்பாத்தி மயானம் அருகே அண்மையில் குழந்தை உட்பட 5 தமிழர்களின் எலும்புக் குவியல்கள் கண்டறியப்பட்ட மனித புதைகுழி பெரும் அதிர்ச்சியையும், மிகுந்த மனவலியையும் தருகிறது என்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழர்களுக்கான தனித்த இறையாண்மை கொண்ட தாயகம் அமைவது ஒன்றே நிலைத்த, சரியான தீர்வாக இருக்க முடியும் என்பதை உலகம் உணர்ந்து கொள்ளவும், ஆதரவளிக்கவும் செம்மணி மனிதப் புதைகுழிகள் குறித்த விசாரணை மிக முக்கிய தொடக்கப் புள்ளியாக அமையும் என்பதையும் உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனிதப் புதைகுழிகள் குறித்து சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்தக்கோரி ஈழத்தமிழ்ச்சொந்தங்கள் முன்னெடுக்கும் அறப்போராட்டம் வெல்லட்டும்.

ஈழத்தாயகத்தில் நடைபெறும் நீதிக்கான தொடர் போராட்டங்களுக்கு ஆதரவாக உலகெங்கும் வாழும் தமிழர்கள் அனைவரும் உணர்வுபூர்வமாக இணைந்து நிற்கின்றோம்.

எங்களைக் கொன்று மண்ணில் புதைத்தாய்! - எங்கள் மண்ணைக் கொண்டுபோய் எங்கே புதைப்பாய்? - இவ்வாறு சீமான் குறிப்பிட்டுள்ளார். (எ)

# வீதி விபத்துகளில் நால்வர் பலி

கொழும்பு, ஜூன் 29

நாடு முழுவதும் இடம்பெற்ற வீதி விபத்துகளில் நான்கு பேர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினமும் நேற்றும் இடம்பெற்ற இந்த விபத்துக்களில் (அனைத்துமே மோட்டார் சைக்கிள் விபத்துக்களாகும்) நால்வர் உயிரிழந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, நேற்று அதிகாலை பொத்துவில் வீதியில் அக்கரப்பத்திலிருந்து பொத்துவில் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

துவிச்சக்கரவண்டியில் சென்றவர் மற்றும் பயணி பலத்த காயங்களுடன் திருக்கோவில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் திருக்கோவில் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# சி. ஐ. டியின் பணிப்பாளராக ஷானி அபேசேகர நியமனம்



கொழும்பு, ஜூன் 29

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ( சி. ஐ. டி) பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரது நியமனத்துக்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. (எ)

# விபத்தில் சிக்கிய மீனவர்களை மீட்க விமானப்படையினருக்குப் பணிப்பு

கொழும்பு, ஜூன் 29

கடலில் விபத்துக்குள்ளான இரண்டு மீன்பிடிப் படகுகளில் இருந்த மீனவர்களை மீட்பதற்காக பெல் 412 ஹெலிகொப்டரை பயன்படுத்துமாறு விமானப்படைக்கு பாதுகாப்புச் செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

மாத்தறை மாவட்டத்தின் தேவேந்திரமுனை மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீன்பிடி நடவடிக்கைகளுக்காக புறப்பட்ட மீன்பிடிப் படகும், மொரகல்ல பகுதியிலிருந்து புறப்பட்ட மீன்பிடிப் படகும் இவ்வாறு விபத்தில் சிக்கியுள்ளன.

விபத்தில் சிக்கியவர்களில் ஒரு மீனவர் மீட்கப்பட்டு கரைக்கு கொண்டு வரப்பட்டதாகவும், ஏனைய நால்வரும் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து கடற்படைக்கு தகவல் அளித்த பின்னர், காணாமல் போனவர்களை கண்டறிவதற்காக விசேடபடகொன்று சம்பவ இடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டதோடு, காணாமல்போன நான்கு மீனவர்களைத் தேடும் பணியை மேலும் பல மீன்பிடி படகுகள் ஏற்கனவே தொடங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, களுத்துறை - பேருவளை மொரகல்ல பகுதியில் இருந்து மீன்பிடி நடவடிக்கைகளுக்காக கடலுக்குச் சென்ற இரண்டு மீனவர்கள் படகு கவிழ்ந்து காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## யாழில் வெள்ளை ஈ தாக்கம் அதிகரிப்பு

# சாவகச்சேரி, கோப்பாய் பிரிவுகளில் முதற்கட்டமாக தடுப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 29

தென்னை மரங்களில் வெள்ளை ஈ தாக்கம் அதிகமாக இனங்காணப்பட்ட சாவகச்சேரி, கோப்பாய் பிரதேச செயலக பிரிவுகளில் முதற்கட்டமாக தடுப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார். தென்னை மரங்களில் வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெள்ளை ஈ தாக்கம் தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் விரிவாக கலந்துரையாடப்பட்டது. வெள்ளை ஈ தாக்கம் அதிகமாக இனங்காணப்பட்ட சாவகச்சேரி, கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் மற்றும் உடுவில் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் - முதற்கட்டமாக சாவகச்சேரி மற்றும் கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இடங்களில் வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக தென்னை பயிர்ச் செய்கை சபையின் ஒத்துழைப்புடன் குறைந்தளவிலான தெளிகருவிகள் மூலமாக தென்னை மரங்களை சுத்தப் படுத்தும் செயல்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும், மற்றைய பத்து பிர தேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இத் தாக்கம் தொடர்பான நிலமைகள் குறித்தும் தென்னைப் பயிர்ச் செய்கை சபையால் எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்படவுள்ள கட்டுப்படுத்தல் செயல்பாட்டுக்குத் தேவையான ஆளணி மற்றும் இதர தேவைகள் தொடர்பில் உரிய திணைக்களங்களுடன் கலந்துரையாடி விரைவான விவரங்களை இரு வாரங்களுக்குள் அறிவிப்பதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மேலும், தென்னை மரங்களை வெள்ளை ஈ தாக்கத்திலிருந்து பாதுகாக்க உரிய செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ள தென்னை பயிர்ச் செய்கை சபையின் தலைவர் மற்றும் அதிகாரிகளுக்கு தமது நன்றிகளையும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் பிரதிப் பொது முகாமையாளர் என். எஸ் . ஜெயலத், உதவிப் பொது மேலாளர் தே. வைகுந்தன், பிராந்திய முகாமையாளர் ஈ. சற்குணன்,

மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர், சாவகச்சேரி பிரதேச செயலாளர், கோப்பாய் மற்றும் யாழ்ப்பாணம் உதவிப் பிரதேச செயலாளர்கள், நல்லூர் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (எ)

# இலங்கை ஐ.நாவின் கைப்பாவை அல்ல!

## ஐக்கிய மக்கள் சக்தி கடும் விசனம்

களுத்துறை, ஜூன் 29

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கின் தேவைக்கு ஏற்ப ஆட்டி வைப்பதற்கு, இலங்கை ஐ.நாவின் கைப்பாவை அல்ல. உங்களது தேவைகளை நிறைவேற்றுவதற்காக இந்த அரசாங்கத்தை பயன்படுத்திக் கொள்ள முயற்சித்தால் அதற்கு தாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அணையாளர் வோல்கர் டேர்க்கின் வருகை மற்றும் அவரது யாழ்ப்பாண பயணம், அரசாங்கம் ஐ.நாவின் தேவைக்கேற்ப செயல்படுகின்றது என்பதை உணர்த்தியுள்ளது.

இந்த அரசாங்கம் ஆட்சியமைப்பதற்கு பல்வேறு அரசசார்பற்ற அமைப்புகள் பெரும் உதவி, ஒத்துழைப்புக்களை வழங்கின.

30 ஆண்டு கால யுத்தத்தின் நிறைவில் இராணுவத்தினர் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்துவதற்கு பலரும் முயற்சித்தனர். குறிப்பாக புலம்பெயர் தமிழர்களின் தேவைக்காகவே இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

அந்த வகையில் தற்போது அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் செயல்பாடுகள் அந்த தேவைகளை நிறைவேற்றுவதற்கானவையா என்ற சந்தேகமும் எழுகிறது.

மனித உரிமைகள் ஆணையாளரிடம் ஒரு விடயத்தைக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். நீங்கள் இலங்கைக்கு வந்ததோ, யாழ்ப்பாணத்துக்கு பயணித்ததோ பிரச்னையல்ல.

ஆனால், உங்களது தேவைகளை நிறைவேற்றுவதற்காக இந்த அரசாங்கத்தை பயன்படுத்திக் கொள்ள முயற்சித்தால் அதற்கு நாம் தயாராக இல்லை.

இலங்கை பிரஜைகள் என்ற ரீதியில் இந்த நாட்டில் இராணுவத்தினர் அமைதியையும், ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் நிலைநாட்டுவதற்காகவே போராடினர் என்பதை நாம் அங்கீகரிக்கின்றோம்.

எனவே அரச சார்பற்ற அமைப்புகளின் தேவைகளுக்காக நாட்டை ஆட்டிவைப்பதற்கு இலங்கை ஐ. நாவின் கைப்பாவை இல்லை என்பதை ஆணையாளர் வோல்கர் டர்க்குக்கு நினைவுபடுத்துகின்றோம் - என்றார். (எ)

## தண்ணீரை சூடாக்கியபோது

# மின்சாரம் தாக்கி 8 வயது சிறுமி பலி

அநுராதபுரம், ஜூன் 29

மதவாச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கிலிகந்தராவ பகுதியிலுள்ள வீடொன்றில் 8 வயது சிறுமி ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்ததாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

மின்சாரம் தாக்கியதையடுத்து, குறித்த சிறுமி மதவாச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மதவாச்சி பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டனர்.

விசாரணையில் சிறுமி தண்ணீரை சூடாக்கும் மின்சார கருவியை பயன்படுத்தியபோது மின்சாரம் தாக்கியதாக தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மதவாச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை ஒரு புதிய நிலைக்கு உயர்த்துவதே எம் நோக்கம்

## ஜனாதிபதி அநுர குமார தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

நாட்டை ஒரு புதிய நிலைக்கு உயர்த்துவதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கம் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்தார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு மற்றும் கிளீன் சிறிலங்கா திட்டம் ஆகியவை இணைந்து தனியார் துறையின் ஆதரவுடன் 100 ரயில் நிலையங்களை நவீனமயமாக்கும் திட்டத்தின் தொடக்க விழா நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதுள்ள கட்டமைப்புக்குள் சீர்திருத்தங்களை மேற்கொள்வதை விட, நாட்டை ஒரு புதிய நிலைக்கு உயர்த்துவதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கம்.

மேலும், தற்போதைய அரசியல் கலாசாரத்தில் மாற்றம் செய்ய அதிகாரத்தில் இருப்பவர்கள் என்றவகையில் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

வீதி விபத்து, வாகன இறக்குமதிக்காக செலவிடும் பாரிய செலவு போன்ற பாதகமான நிலைமைகளைச் சமாளிக்க நாட்டின் பொதுப் போக்குவரத்து சேவையை ஒரு புதிய நிலைக்கு உயர்த்த வேண்டியது அவசியம். விசேட தேவைகள் உள்ள சமூகம் உட்பட அனைத்து பயணிகளின் பாதுகாப்பையும் வசதியையும் உறுதி செய்யும் சுத்தமான, அழகான ரயில் நிலைய கட்டமைப்பை நாட்டில் உருவாக்குவதே புதிய திட்டத்தின் நோக்கம்- என்றார்.



இதன்போது, வீதிப் பாதுகாப்பு செயல் திட்டத்தை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவிடம் கையளித்தார்.

# தமிழகத்துக்குள் ஊடுருவ முயன்ற இலங்கையர்கள் மூவர் கைதாகினர்

தனுஷ்கோடி, ஜூன் 29

பல்வேறு குற்றப்பின்னணி உள்ள சிங்களர்கள் இருவர் உட்பட மூன்று இலங்கையர்கள் சட்டவிரோதமான முறையில் தமிழகத்துக்குள் ஊடுருவ முயன்ற போது தனுஷ்கோடிக்கு அருகிலுள்ள நான்காவது மணல் திட்டில் வைத்து இந்திய கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டு மரைன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு தனுஷ்கோடி முதல் சர்வதேச கடல் எல்லை வரை உள்ள மணல் திட்டு பகுதிகளில் இந்திய கடலோர காவல் படைக்குச் சொந்தமான ஹோவர் கிராப்ட் ரோந்து கப்பலில் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

இதன்போது தனுஷ்கோடியை அடுத்த நான்காம் மணல் திட்டில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நின்ற மூன்று பேரையும் சோதனை செய்ததில் அவர்களிடம் வங்கி பணப்பரிமாற்ற அட்டைகள் மற்றும் இலங்கைப் பணம் 46,000 ரூபாய் உள்ளிட்டவைகள் இருந்தன. இதனையடுத்து மூவரையும் கைது செய்த இந்திய கடலோர காவல்படையினர் தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரைக்கு கொண்டு சென்று மரைன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவர்கள் மூவரும் தமிழகத்துக்குள் ஊடுருவிய பின் அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு தப்பிச்செல்ல திட்டமிட்டிருந்தது தெரியவந்துள்ளது. (எ-05)

# துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபரின் நண்பர்கள் ஐவர் கைது

அநுராதபுரம், ஜூன் 29

அநுராதபுரம் - திரப்பனை கல்குலம பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபரின் நண்பர்கள் என பொலிஸார் கூறினர்.

அநுராதபுரம், திரப்பனை கல்குலம பகுதியில் கடந்த 26 ஆம் திகதி இரவு துப்பாக்கிச் சூட்டு சம்பவமொன்று இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில், 28 வயதுடைய இளைஞர் ஒருவர் காயமடைந்து அநுராதபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் குற்றத் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், துப்பாக்கிச் சூட்டுக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் பிற்பகல் கைதுசெய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதன்போது, சந்தேக நபர்களிடமிருந்து ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருட்களும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த நபரும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களும் நண்பர்கள் என்றும், போதைப்பொருள் தொடர்பில் அவர்களுக்கு இடையே ஏற்பட்ட தகராறின் விளைவாக துப்பாக்கிச் சூடு நடந்ததாகவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (எ)

# பிரிவினைவாதிகளை மட்டும் சந்தித்த ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர்

## விமல் வீரவன்ஸ கடும் விசனம்

கொழும்பு, ஜூன் 29

யுத்தத்தில் விடுதலைப் புலிகளால் இராணுவத்தினரும் பொலிஸாரும் சிங்கள மக்களும் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களின் மனித உரிமைகள் மீறப்படவில்லையா? இவர்களை மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் நினைவுகூரவில்லை. நவநீதம்பிள்ளை, செய்ட் அல் ஹூசைன் ஆகியோரை போன்று வோல்கர் டேர்க் பிரிவினைவாதிகளை மாத்திரம் சந்தித்துள்ளார். இவரது செயல்பாடு வன்மையாக கண்டிக்கத்தக்கது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐ. நா. மனித உரிமைகள் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை யுத்தம் முடிவடைந்தவுடன் இலங்கைக்கு வருகை தந்தார். பிரிவினைவாதிகளை மாத்திரம் சந்தித்து விட்டு இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அறிக்கை சமர்ப்பித்தார்.

அதேபோல் 2016 ஆம் ஆண்டு மனித உரிமைகள் ஆணையாளர் செய்ட் அல் ஹூசைன் இலங்கைக்கு வருகை தந்தார். விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதரவாளர்களுடன் சந்திப்புக்களை நடத்தினார்.

இவருக்கு எதிராக பேரணி சென்றதற்காக எம்மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு இன்றுவரை விசாரணையில் உள்ளது. இவரும் இலங்கைக்கு எதிராகவே அறிக்கை சமர்ப்பித்தார்.

நவநீதம் பிள்ளை, செய்ட் அல் ஹூசைன் ஆகியோர் பின்பற்றிய கொள்கையை முழுமையாக பின்பற்றி தற்போதைய ஆணையாளர் வோல்கர் டேர்க், விடுதலைப் புலிகள் அமைப்பு கொள்கையுடைய இனவாதிகளை மாத்திரம் சந்தித்தார்.

ஐ.நா. ஆணையாளர் யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின் கொடிகளை ஏந்தியிருந்தவர்களுடன் ஒன்றிணைந்து முன்னாள் போராளிகளின் நினைவிடங்களுக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.

அதேபோன்று செம்மணி மனிதப் புதைகுழி பகுதிக்கு சென்று அஞ்சலி செலுத்தினார். இவர் எவ்வாறு நடுநிலையாக செயல்படுவார்?

யுத்தத்துக்கு தலைமை தாங்கிய பாதுகாப்புத் தரப்புடன் தொடர்புடைய உயரதிகாரிகள் ஐ.நா. ஆணையாளரை சந்திப்பதற்கு அனுமதி கோரியிருந்த நிலையில் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இனவாதிகள் மற்றும் பிரிவினைவாதிகளை மாத்திரம் சந்தித்து விட்டு ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் சென்றுள்ளார். இவரது செயல்பாடு வன்மையாக கண்டித்தக்கது.- என்றார்.(எ)

# மாத்தறையில் கடத்தப்பட்டவர்கள் காலி கடற்கரையில் கண்டுபிடிப்பு!

காலி, ஜூன் 29

மாத்தறை - வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் தெரிவுக்கான சபைக் கூட்டத்திலிருந்த போது கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் இருவரும் காலி, உனவடுன கடற்கரை பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வெலிகம பிரதேச சபையின் புதிய தவிசாளரை தெரிவு செய்வதற்கான சபைக் கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 09. 30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்துக்கு வருகை தந்திருந்த தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் இருவர் திடீரென காணாமல் போயிருந்தனர்.

இதன் காரணமாக வெலிகம பிரதேச சபைக் கூட்டத்தில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் இருவரும் கடத்திச் செல்லப்பட்டதாக வெலிகம பிரதேச சபையின் உறுப்பினர்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தனர்.

இதனால் வெலிகம பிரதேச சபையின் புதிய தவிசாளரை தெரிவு செய்வதற்கான சபை கூட்டத்துக்கான நடவடிக்கைகள் 30 நாட்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் இருவரும் காலி, உனவடுன கடற்கரை பகுதியில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

உறுப்பினர்கள் இருவருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# பிரசார மேடைகளில் இருந்தவர்கள் பொலிஸ் பிரிவில் உயர் பதவிகளில்

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 28

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார மேடைகளில் இருந்தவர்கள் இன்று பொலிஸ் பிரி வில் உயர் பதவிகளில் உள்ளனர். இதனால், பக்கச்சார்பற்ற விசாரணைகளை இடம் பெறுகிறதா? என்ற சந்தேகம் காணப்படுகிறது. இருப்பினும், நீதிமன்றத்தின் மீது முழுமையான நம்பிக்கையுள்ளது என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பு புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முன்னிலையான பின்னர் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

அரசாங்கம் ஊழலை இல்லாதொழிப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு தெரிவுசெய்த அடிப்படையில் செயல்படுவதை அவதானிக்க முடிகிறது.

நல்லாட்சி அரசாங்க காலத்தில் ஊழல் ஒழிப்பு அலுவலகம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. அதன் அடிப்படையில்தான் அரசியல்வாதிகளுக்கு எதிராக பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நல்லாட்சி அரசாங்கத்தில் ஊழல் ஒழிப்பு அலுவலகத்தின் பணிப்பாளராக செயல்பட்டவர் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சின் அமைச்சராக உள்ளார்.

இந்த அலுவலகத்தில் இருந்து மாதச் சம்பளம் பெறவில்லை என்று குறிப்பிட்டார். தற்போது கொடுப்பனவு மாத்திரம் பெற்றுக்கொண்டதாக குறிப்பிடுகிறார்.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார மேடைகளில் இருந்தவர்கள் இன்று பொலிஸ் பிரிவில் உயர் பதவிகளில் உள்ளனர். இந்த அரசாங்கத்தின் நிர்வாகத்திலும் பல முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன.

இது குறித்தும் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? என்று பார்த்துக் கொண்டிருக்கிறோம் - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
29.06.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், ஆனி 15

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## இது வெற்றியா?

வடக்கில் 5,941 ஏக்கர் காணிகள் அரச காணிகளாக்கி கையகப்படுத்தும் வர்தமானிக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. இதனை ஒவ்வொருவரும் அவரவரின் சார்பு நிலையில் இருந்து நோக்கக் கூடும். இது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் முயற்சிக்கான வெற்றியென்று சிலர் கூறக்கூடும். இன்னொரு தரப்போ தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நகர்வில் ஏற்பட்ட பின்னடைவு எனலாம். ஆனால், ஒவ்வொரு விடயங்களையும் குறிப்பிட்ட சூழலிலிருந்தும், அந்த குறிப்பிட்ட சூழலில் எவ்வாறான அரசியல் நிலைமைகள் காணப்படுகின்றன என்பதிலிருந்தும் நோக்க வேண்டும்.

சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ ஒவ்வொரு விடயங்கள் நிகழும் போதும் அவை தொடர்பில் உணர்ச்சிவசப்படுவதை தவிர்த்து, ஒவ்வொன்றையும் அறிவின் வெளிச்சத்தில் நோக்க வேண்டும். தமிழ்ச் சூழலிலுள்ள மிகப் பெரிய பிரச்னையே அறிவின் வெளிச்சத்தில் விடயங்களை நோக்குவதற்கு பதிலாக, இருளை பழிக்கும் போக்கே மேலாதிக்கம் பெற்றிருக்கின்றது. இருள் எப்போதும் இருள்தான். இருளில் வெளிச்சத்தை காணும் முயற்சிகளில்தான் மனிதர்கள் ஈடுபடலாமே தவிர, இருளில் பண்பு மாற்றம் தேடுவது அல்ல மனிதர்களின் பணி - அது அறியாமை. ஏனெனில், இருளின் தன்மையை எவராலும் மாற்ற முடியாது.

குறித்த விவகாரத்தின் மூலம் பொதுமக்களின் காணிகள் பாதுகாக்கப்பட்டிருந்தால் அது வரவேற்கக் கூடியதே ஆனால் இந்த இடத்தில் சமூகப் பொறுப்புள்ள ஒரு கேள்வியையும் சாதாரணமாக தள்ளிவிட்டுச் செல்ல முடியவில்லை - வடக்கு மாகாணத்தில் இவ்வாறு அரசாங்கம் அடையாளம் கண்டுள்ள காணிகளின் உரிமையாளர்கள் ஏன் தங்களுக்குச் சொந்தமான காணியை, நிலமற்ற ஏழை மக்களுக்கு வழங்க முன்வரக் கூடாது? அல்லது பொதுத் தேவைகளுக்காக வழங்கக் கூடாது?

இந்த விடயத்தை ஓர் அரசியல் வெற்றியாக எவரேனும் கொண்டாட முற்பட்டால் அது தவறு. ஒவ்வொரு விடயங்களையும் வெற்றியாக பார்க்கும் போது, அதன் மற்றைய பக்கங்களை காணமுடியாமல் போய்விடும். தமிழர் அரசியல் கையறு நிலைக்குச் சென்றமைக்கு இதுவும் ஒரு பிரதான காரணமாகும்.

காணி சுவீகரிப்புக்கான காலக்கெடு முடிவடைவதற்கு ஒரு நாள் உள்ள நிலையிலேயே இவ்வாறானதொரு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டர்க்கின் இலங்கை விஜயம், இதன் போது அவர் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம்தான் பிரச்னைகளை தீர்க்க முடியும் என்று குறிப்பிட்டிருப்பது அத்துடன், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடனான சந்திப்பின் போது உள்ளக பொறிமுறையை தான் வலியுறுத்தியுள்ளதாக குறிப்பிட்டமை போன்ற விடயங்களையும் சேர்த்தே தீர்ப்புச் செய்தியை வாசிக்க வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் குறிப்பிடுவது போன்றே, குறித்த தீர்ப்பின் மூலம் இலங்கையின் நீதித்துறையின் சுயாதீனம் வெளிப்பட்டிருக்கின்றது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மிகவும் பலமான நிலையிலிருக்கின்ற போதிலும் கூட, தங்களின் முடிவை நிறைவேற்றும் நோக்கில் நீதித்துறையில் அவர்கள் தலையீடு செய்யவில்லை. ஏனெனில் தங்களுடைய தீர்மானத்தை ஆதரிக்கவில்லை என்பதற்காகவே உச்சநீதிமன்ற நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பதவி விலக்கும் நகர்வை ராஜபக்ஷக்கள் மேற்கொண்டனர், இறுதியில் பதவியிலிருந்தும் அகற்றினர்.

ராஜபக்ஷக்களின் காலத்தோடு ஒப்பிட்டால் அநுரகுமாரவின் காலம் நீதித்துறையின் பொற்காலம் போன்றே காட்சியளிக்கின்றது. அரசாங்கம் ஆட்சியை பொறுப்பேற்று வெறும் ஆறு மாதங்களே ஆகியுள்ள நிலையில் நீதித்துறையின் சுயாதீனத்தை அவர்கள் பாதுகாத்திருக்கின்றனர் - இந்த விடயத்தை இப்படியும் வாசிக்கலாம் அல்லவா!

அதேவேளை இதனை இப்படியும் வாசிக்கலாம் என்பதையும் மறந்து விடக் கூடாது அதாவது, உரிமை கோரப்படாத தனியார் காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கை நீதிமன்றத்தின் மூலம் தடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அரச காணிகளை தேசிய பாதுகாப்புத் தேவைக்காக, பொருளாதார மேம்பாட்டுத் தேவைக்காக அதிகளவில் எடுக்கும் தீர்மானத்தை அரசாங்கம் மேற்கொண்டால் அதனை எந்தத் தீர்ப்பாலும் தடுக்க முடியாதல்லவா.

## இந்தியாவிலிருந்து படகு மூலம் கடத்தி வரப்பட்ட 250 கிலோ கஞ்சா சிக்கியது!

யாழ்ப்பாணம், ஜூன் 29

இந்தியாவில் இருந்து படகு மூலம் கடத்தி வரப்பட்ட 250 கிலோ கஞ்சா காரைநகர் பகுதியில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

250 கிலோ கஞ்சா கடத்தி வரப்படுவதாக கடற்படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் படகை கடற்படையினர் மறித்து சோதனையிட்டபோதே கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

கஞ்சா கடத்தி வந்த படகில் இருந்த மூவரை கடற்படையினர் கைது செய்ததோடு படகும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

இதன்போது கைப்பற்றப்பட்ட கஞ்சா மற்றும் சந்தேக நபர்கள் ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப் படவுள்ளனர். (அ)

## 'வீதி விபத்துக்களை தவிர்ப்போம்': மன்னாரில் விழிப்புணர்வு நிகழ்ச்சி

மன்னார், ஜூன் 29

மன்னார் உயிலங்குளத்தில் இயங்கும் உயர் தொழில் நுட்பவியல் நிறுவனம் மற்றும் மாணவர்களின் ஏற்பாட்டில், "வீதி விபத்துக்களை தவிர்ப்போம்" எனும் தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் பஸ் நிலையத்தில் விழிப்புணர்வு நாடகம் இடம்பெற்றது.

வீதி விபத்துக்களுக்கான முக்கியமான காரணங்கள், அதன் தீவிர விளைவுகள் மற்றும் தடுக்கும் வழிமுறைகள் குறித்து மாணவர்களால் தெளிவூட்டும் வகையில் விழிப்புணர்வு முன்னெடுக்கப்பட்டது.

மேலும் வாகன ஓட்டுநர்கள் பாதுகாப்புச் சாதனங்களை பயன்படுத்துவதன் முக்கியத்துவம், போக்குவரத்து விதிமுறைகளை கடைப்பிடிப்பதன் அவசியம் மற்றும் அவற்றை மீறுவதால் ஏற்படும் அபாயங்கள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்த நிகழ்வு பொது மக்கள் மற்றும் வாகன ஓட்டுநர்களிடையே பொறுப்பான போக்குவரத்து பழக்கங்களை வளர்க்கும் நோக்கில் ஒரு முக்கியமான முயற்சியாக அமைந்தது.

மேலும் உயர் தொழில் நுட்பவியல் நிறுவன மாணவர்களால் மன்னார் பஜார் பகுதியில் சிரமதானப் பணியும் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு குறித்து கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு விளக்கம்

கொழும்பு, ஜூன் 29



அரச சேவையை, பயனுள்ள மற்றும் செயற்திறனான சேவையாக மாற்றுவதற்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பது தொடர்பில் கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயலமர்வு நேற்று கொழும்பில் உள்ள கல்வி அமைச்சில் இடம் பெற்றது.

அரசாங்கத்தின் முதன்மைத் திட்டமான அரச சேவையை டிஜிற்றல் மயமாக்கும் திட்டத்தின் ஆரம்ப அணுகுமுறையாக அதிகாரிகளை தெளிவுபடுத்துவதும் தயார்படுத்துவதும், அரச சேவைக்குள் செயற்கை நுண்ணறிவு குறித்த சாதகமான அணுகுமுறையை உருவாக்குவதும் காணப்படுகின்றது.


இந்த நிகழ்வில் பங்கேற்ற ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமநாயக்க, செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துவதன் ஊடாக கல்வித் துறையின் தரத்தை, காலத்திற்கு ஏற்பு மேம்படுத்த முடியும் என தெரிவித்தார்.

இந்த செயலமர்வை, ஜனாதிபதி அலுவலகம், டிஜிற்றல் பொருளாதார அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப நிறுவன பணிப்பாளர் சபை உறுப்பினர்களான ஹர்ஷ புரசிங்க மற்றும் சமிச அபேசிங்க ஆகியோர், இதன் வளவாளர்களாக பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில், ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன்கமகே, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ ஆகியோர் பங்கேற்றனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# நோபல் போட்டியில் ட்ரம்ப்!

சு. வெங்கடேஸ்வரன்



அமைதிக்கான நோபல் பரிசுக்காக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பெயரைப் பரிந்துரைக்க முடிவெடுத்துள்ளதாக பாகிஸ்தான் அறிவித்தது அந்நாட்டில் கடும் விமர்சனத்தையும், எதிர்ப்பையும் சந்தித்துள்ளது.

அதேநேரத்தில் தனது அமைதிப் பணிகளுக்காக தனக்கு இதுவரை 4 முதல் 5 முறை நோபல் பரிசு வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், நோபல் பரிசு தாராளமயக் கொள்கையைக் கொண்ட தலைவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது, தமக்கு தரமாட்டார்கள் என்றும் ட்ரம்ப் அதிருப்தி தெரிவித்தார்.

இது ஒருபுறம் இருக்க இதுவரை எத்தகைய உலகத் தலைவர்களுக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது என்ற கடந்தகால அமைதி நோபல் வரலாற்றைத் திருப்பிப் பார்த்தால் ட்ரம்ப் கூறுவதில் எந்த அளவுக்கு நியாயம் உள்ளது என்பது தெரியவரும்.

கடந்த 2009-இல் அப்போதைய அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவுக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. ஆனால், சமீபகால அமெரிக்க அதிபர்களில் வெளிநாடுகள்மீது அதிக தாக்குதல்களை நடத்தி ஏராளமான அப்பாவி மக்களின் உயிரிழப்புகளுக்கு காரணமாக இருந்தவர் ஒபாமா.

ஒபாமா ஆட்சிக் காலத்தில் ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா, லிபியா, யேமன், சோமாலியா, பாகிஸ்தான் என 7 நாடுகள் குண்டுகளால் துளைத்தெடுக்கப்பட்டன. இவை அனைத்தும் பயங்கரவாதி ஒசாமா பின்லேடன், தலிபான் உள்ளிட்ட பல்வேறு பயங்கரவாத அமைப்பினரைக் குறிவைக்கும் தாக்குதல் எனக் கூறப்பட்டது. ஆனால், இதில் பொதுமக்களும் பெருமளவில் உயிரிழந்தனர்.

ஒபாமாவுக்கு முன்பு அதிபராக இருந்த ஜோர்ஜ் டபிள்யு புஷ் ஆட்சிக் காலத்தைவிட ஒபாமா ஆட்சிக் காலத்தில் வெளிநாடுகளில் அமெரிக்க தாக்குதல் 10 மடங்கு வரை அதிகரித்தது.

அதேநேரத்தில் ஈராக், ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டிருந்த அமெரிக்க வீரர்களை 1,50,000-இல் இருந்து 40,000-ஆக ஒபாமா குறைத்தார். ஆனால், இதன் மூலம் அங்கு அமெரிக்க தாக்குதல்கள் குறையவில்லை. ட்ரோன் தாக்குதல் தொழில்நுட்பம் வளர்ந்துவிட்டதால் குறைவான வீரர்களைப் பயன்படுத்தி அதிக இடங்களில் தாக்கமுடியும் என்ற முன்னேற்றம் ஏற்பட்டது. எனவேதான் வீரர்கள் திரும்பப் பெறப்பட்டனர்.

ஒபாமா அமெரிக்க அதிபராகப் பதவியேற்ற 9 மாதங்களில் அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசை அறிவித்தது பரிசுக் குழு. 'சர்வதேச நாடுகளிடையே ராஜீய உறவை வலுப்படுத்தினார் உலக மக்களிடையே ஒத்துழைப்பை அதிகரித்தார்' என்று அதற்கு காரணம் கூறப்பட்டது.

2020-இல் ஒபாமா எழுதிய சுயசரிதையில், 'நோபல் பரிசு அறிவிப்பைக் கேட்டவுடன், எனக்கு எதற்கு நோபல் பரிசு என்று தோன்றியது' எனக் குறிப்பிட்டுள்ளார். ஒபாமாவுக்கு அவசரப்பட்டு நோபல் பரிசு வழங்கிவிட்டோம் என்று தேர்வுக் குழுவில் இருந்தவர்கள் சில ஆண்டுகளுக்குப் பிறகு வருத்தப்பட்டதாகவும் தகவல் வெளியானது.

அதேநேரத்தில் ஒபாமாவை அடுத்து பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், தனது முதல் ஆட்சிக் காலத்தில் (2017-2021) சிரியா, ஆப்கானிஸ்தானில் இருந்து முழுமையாக அமெரிக்கப் படைகளை விலக்க நடவடிக்கை எடுத்தார். உலகுக்கு அச்சுறுத்தல் மிகுந்த நாடுகளில் ஒன்றாகக் கருதப்படும் வடகொரியாவுக்கு பயணம் மேற்கொண்டார். அந்நாட்டு அதிபர் கிம் ஜோங் உன்னுடன் இருமுறை நேரில் பேச்சு நடத்தினார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சியாளர்களுடன் தானே நேரடிப் பேச்சில் ஈடுபட்டார். அரபு நாடுகள்-இஸ்ரேல் இடையே ஆபிரஹாம் ஒப்பந்தத்தை மேற்கொள்ள காரணமாக இருந்தார். சிரியா உள்நாட்டுப் போர் குறித்து ரஷ்ய அதிபர் புடினுடன் பேச்சு என சர்வதேச அளவில் அமைதிக்கான பல முன்னெடுப்புகளை மேற்கொண்டார்.

அமெரிக்கர்களுக்கும், அமெரிக்காவுக்கும் முன்னுரிமை, வர்த்தகப் போர், பதிலடி வரி விதிப்பு, சட்டவிரோதமாக ஊடுருவியவர்களுக்கு எதிராக தீவிரமான நடவடிக்கை என பல்வேறு சர்ச்சைக்குரிய விஷயங்கள் ட்ரம்ப் ஆட்சிக் காலத்தில் இருந்தாலும், ஒபாமாவுடன் ஒப்பிடும்போது அந்நிய நாடுகளில் உயிர்ச்சேதம் விளைவிக்கும் தாக்குதல்கள் ட்ரம்ப் ஆட்சிக் காலத்தில் பெருமளவில் குறைக்கப்பட்டது.

உக்ரைன் போரை நிறுத்தும் நோக்கத்தில்தான் அந்நாட்டு அதிபர் ஸெலன்ஸ்கியை அமெரிக்காவுக்கு அழைத்து ட்ரம்ப் பேசினார். அவரின் நோக்கம் சரியாகவே இருந்தது. ஆனால், அணுகுமுறைத் தவறால் உக்ரைன் போர் நிறுத்தம் தள்ளிப்போகிறது. அதிரடியாகப் பேசுவதும், தடாலடி முடிவுகளை எடுப்பதும் ட்ரம்ப்பின் குறைபாடாக அறியப்படுகிறது.

அமைதிக்கான நோபல் பரிசு என்பது எப்போதுமே சரியான நபர்களுக்கு மட்டும் வழங்கப்படுவதில்லை. பல ஆண்டுகளாக போர் நடத்தி, ஆயிரக்கணக்கான மக்களின் உயிரிழப்புக்குப் பிறகு அமைதி ஒப்பந்தம் மேற்கொண்ட தலைவர்களுக்கும் நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. இதில் இஸ்ரேல் பிரதமராக இருந்த இட்ஸாக் ரபீன், சிமோன் பெரீஸ், அமெரிக்க வெளியுறவு அமைச்சராக இருந்த ஹென்றி கிஸ்னர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இதில் வியட்நாம் போரை முடிவுக்கு கொண்டுவர அமைதி ஒப்பந்தம் மேற்கொண்டதற்காக கிஸ்னருக்கு அவசரகதியில் 1973-ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது. அப்போதே தேர்வுக் குழுவில் இருந்து சிலர் விலகினர். ஏனெனில், அவரின் ஒப்பந்தத்தால் அமைதி ஏற்படுத்தப்படவில்லை. இதையடுத்து, பரிசைத் திரும்ப அளிக்கவும் கிஸ்னர் முயற்சித்தார். ஆனால், நோபல் குழு ஏற்கவில்லை.

அஹிம்சை மூலம் இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுத் தந்த மகாத்மா காந்தியின் பெயர் பலமுறை அமைதிக்கான நோபல் பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்டும் ஏற்கப்படவில்லை. இப்படி பல முரண்பாடுகளுடன்தான் அமைதிக்கான நோபல் பரிசு தேர்வுக் குழு செயல்படுகிறது.

அடுத்ததாக இஸ்ரேல்-ஈரான் போரை முடிவுக்கு கொண்டுவந்ததாகக் கூறி ட்ரம்ப் ஆதரவாளர்கள் அவரை நோபல் பரிசுக்கு மீண்டும் முன்னிறுத்த வாய்ப்புள்ளது. ஆனால், ஒபாமாவுக்கு நோபல் அறிவித்து சூடுபட்ட தேர்வுக் குழு, ட்ரம்ப் விஷயத்தில் நிதானமாகவே முடிவெடுக்கும் எனத் தெரிகிறது. ●

# இந்தவார ராசிபலன் 29.06.2025 - 05.07.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாசவசு வருடம் - ஆனி 15
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : பஞ்சமி

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் உங்களுக்கு ஆபரண சேர்க்கை உண்டு. உடன் பிறப்புகள் இடையே கருத்து வேறுபாடு ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். சில விஷயங்களில், சிலருக்குத் தடை, தாமதங்கள் ஏற்படும். மேடைப் பேச்சாளர்கள் தாங்கள் பேச்சின் மூலம் வருமானம் ஈட்டுவது உறுதி. சுலபமாக வசூலாகிவிடும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு ஏற்படும். புத்திர பாக்கியம், பதவி உயர்வு, புதிய தொழில் வாய்ப்புகள் ஏற்படும். ஆன்மீகவாதிகளின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். வருமானம் அதிகம் வந்தாலும், செலவுகளை கட்டுப்படுத்த முடியாது. தொழிலில் கூட்டாளியின் புதிய ஆலோசனைகள் வரவேற்கத்தக்கதாக இருக்கும். அவரது கடமை உணர்வும், திறமையும் உங்களுக்கு திருப்திகரமாக இருந்தாலும், அவரை முழுமையாக நம்பி விடாதீர்கள்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய் மாமனுக்கு நன்மை ஏற்படும். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்பட்டும். வெற்றி கரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். எதிர்பார்ப்பை விட தொழ லில் அதிக இலாபம் கிடைக்கும்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் பெரியவர்கள் ஆலோசனைக்கு ஏற்ப பூஜா வழிபாடுகளில் ஈடுபடுவீர்கள். நல்ல குரு வாய்க்கப்பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும். விரும்பிய பொருட்களை வாங்கக் கூடிய அளவுக்குத் திருப்திகரமான தனவரவு இருக்கும். நல்லவர்களின் தொடர்பு மூலம் நன்மைகள் அதிகம் ஏற்படலாம். உணவருந்தும் நேரமின்றி உழைக்க வேண் டியது வரும். அப்படி உண்ணும் உணவும் வாய்க்கு ருசியாக கிடைக்காது.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். பயிர், மனை இவற்றால் இலாபம் ஏற்படும். சிலருக்குத் திருமணம், சந்ததி விருத்தி ஏற்படும். சகோதரரால் நன்மைகள் உண்டு. மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து போராடி வெற்றி பெறு படி அதிகரிக்கும். அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும். வாக்கு வன்மை ஓங்கும்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். எதிர்பாராத தனவரவுகள் இருக்கும். திருமணம், வளைகாப்பு போன்ற சுப காரியங்களுக்கு வீடே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயம், மகிழ்ச்சியும் ஏற்படும். சிலருக்கு உழைப்பு அதிகமாகி அதற்கேற்றார் போல் ஆதாயமும் அதிகரிக்கும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். நல்ல வகையான உணவு வகைகளை உட்கொள்வார்கள். சுபகாரியப் பேச்சுக்கள் பேசப்படும். அரசு வேலை வாய்ப்புகள் இருக்கும்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் புதிய முயற்சிகள் மூலம் பண வருமானம் அதிகரிக்கும். சிலருக்குப் புதுப்புதுப் பதவிகளும் அதன் மூலம் வருவாய் பெருக்கமும் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். உங்கள் தொழில் விஷயமாகத் தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக் கும். அவர்கள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் உங்களுக்கு மிக்க அனுகூலமான வாரம். பல வழிகளிலும் தனவரவு ஏற்படும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவிகள் கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக் கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடை யும். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும். மிகப்பெரிய சாகசங்களை புரிவீர்கள்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் புது தெம்பும், உற்சாகமும் கூடும். வாகன வசதிகள் மேம்படும். அந்தஸ்து உயரும். தொலை தூரத்திலிருந்து நற்செய்தி கள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். பக்திப் பெருக்கினால் ஞானத் தன்மை எய்துவார்கள். சிலருக்கு அதிகாரப் பதவியும், அமைச்சர் போன்ற பதவிகளும் கிடைக்கும். நண்பர்களிடம் சுமுகமாக இருக்க முயற்சியுங்கள். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சியும் உண்டாகும். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். மனதில் தெய்வ பக்தி கூடும். நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக் கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். எப்போதும், உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் கலைஞர்களுக்கு சிறப்பான வாரம். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி, கை நிறைய முன் பணம் பெற்று மகிழ்வர். தொழிலில் ஈடுபட்டு உள்ளவர்களுக்கு இதுநாள் வரை இருந்து வந்த இழுபறி நிலைகள் பகலவனைக் கண்ட பனிபோல் விலகும், சிலருக்கு வருமான வரி பிரச்சனைகள் தலை தூக்கலாம் எனவே, கம்பெனி கணக்குகளை சீராக எழுதி வைக்கவும். இல்லையெனில் சிக்கல்களைச் சந்திக்கலாம். வந்தபின் ஓடுவதை விட, வருமுன் காப்பது தான் புத்திசாலித்தனம். வீட்டில் பிடிவாதங்களை தளர்த்தினால் பிணக்குகள் தீரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொனால்ட் ட்ரம்பின் தான்தோன்றித்தனமான போக்கிற்கு உலகம் தன்னை பழக்கப்படுத்திக் கொள்கிறதா?






வீரகத்தி தனபாலசிங்கம்


## சட்டத்தை ஆதாரமாகக் கொண்ட சர்வதேச முறைமை ஒன்று இல்லாத ஒரு உலகம்


வரலாற்றில் இருந்து நாம் பாடம் படிப்பதில்லை என்பதை வரலாற்றில் இருந்து படிக்கிறோம் என்ற ஜேர்மன் தத்துவஞானி ஜோர்ஜ் வில்ஹெல்ம் பிரெடெரிக் ஹெகலின் மிகவும் பொருள்பொதிந்த கூற்றை அரை நூற்றாண்டுக்கு முன்னர் முடிவுக்கு வந்த வியட்நாம் போர்க் காலத்தில் அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சராக இருந்த றொபேர்ட் மக்னமாரா ஒரு தடவை கூறியதாக வாசித்தது நன்றாக நினைவிருக்கிறது. பிறகு அவர் உலகவங்கியின் தலைவராகவும் பதவி வகித்தார்.

அமெரிக்காவும் ஏனைய இராணுவ வல்லரசுகளும் அவற்றின் வரலாற்றுத் தோல்விகளில் இருந்து படிப்பினைகளை பெற்று தவறுகளை திருத்திக் கொள்வதில்லை. உலகின் மீது மேலாதிக்கத்தை செலுத்துவதற்காக வல்லரசுகள் தொடர்ந்தும் தவறுகளை செய்வதற்கு தயங்குவதுமில்லை.

எதிரிகள் என்று தாங்கள் கருதுகின்ற நாடுகள் மீது இராணுவ ஆக்கிரமிப்பை செய்வதன் மூலமாக சொந்தப் பாதுகாப்பை உறுதி செய்யமுடியும் என்ற மாயையில் வல்லரசுகள் தொடர்ந்தும் மூழ்கியிருக்கின்றன. இராணுவ வல்லமையினால் எதிர்பார்த்த விளைவுகளை அடையமுடியாது என்பதை நிறுவும் உதாரணங்களினால் வரலாறு நிறைந்து கிடக்கிறது.







பல இலட்சக்கணக்கான மக்களை கொன்றொழித்ததை தவிர, வியட்நாம் போரில் அமெரிக்கா 'சாதித்தது' எதுவுமில்லை. அந்தப் போரில் கண்டதைப் போன்ற பழிப்புக்கிடமான தோல்வியையே இந்த நூற்றாண்டின் முதல் இரு தசாப்தங்களில் ஆப்கானிஸ்தானில் செய்த ஆக்கிரமிப்புக்கு பின்னரும் அமெரிக்கா கண்டது. அல் - கயெடா இயக்கத்தை ஒழித்துக் கட்டுவதும் தலிபான்களை தோற்கடித்து ஆப்கானிஸ்தானை ஜனநாயகமய மாக்குவதுமே நோக்கம் என்று கூறிக் கொண்டு 2001 ஆம் ஆண்டில் ஆக்கிரமிப்பைச் செய்த அமெரிக்கா 20 வருடங்களுக்கு பிறகு அதே தலிபான்களிடம் ஆப்கானிஸ் தானை கையளித்துவிட்டு வெட்கக்கேடான முறையில் வெளியேற வேண்டியிருந்தது.

சதாம் ஹூசெய்ன் பேரழிவு ஆயுதங்களைக் குவித்து வைத்திருப்பதாக பொய் கூறிக்கொண்டு 2003 ஆம் ஆண்டில் ஈராக்கை ஆக்கிரமித்த அமெரிக்கா அந்த நாட்டை நிர்மூலம் செய்தது. எந்தவொரு பேரழிவு ஆயுதத்தையும் ஈராக்கில் அமெரிக்கர்களால் கண்டெடுக்க முடியவில்லை. கேணல் கடாபியின் கொடுங்கோன்மை ஆட்சியில் இருந்து லிபியாவின் மக்களை பாதுகாக்கப் போவதாக கூறிக் கொண்டு 2011 ஆம் ஆண்டில் படையெடுத்த அமெரிக்கா அந்த நாட்டை சினானாபின்மாக்கியது. பதினான்கு வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும் கூட லிபியாவில் உறுதிவாய்ந்த அரசாங்கம் ஒன்றை அமைக்க முடியாமல் இருக்கிறது.

செயல் விளைவான அணுவாயுத திட்டம் எதுவும் ஈரானிடம் கிடையாது என்று அமெரிக்க புலனாய்வு நிறுவனங்கள் மூன்று மாதங்களுக்கு முன்னர் கூறியதையும் பொருட்படுத்தாமல் தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இஸ்ரேலுடன் சேர்ந்து கடந்த வாரம் ஈரானின் அணுசக்தி மையங்கள் மற்றும் இராணுவ கட்டமைப்புகளை குண்டுவீசித் தகர்த்திருக்கிறார்.

ஈரான் அணுவாயுதங்களை தயாரிக்கும் செயற்பாடுகளில் இறங்கியிருக்கிறது என்பதற்கு எந்த சான்றும் இல்லை என்று சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் ராபீல் குறொசி அண்மையில் கூறியிருந்தார். எல்லாவற்றுக்கும் மேலாக, அமெரிக்க தேசிய புலனாய்வு பணிப்பாளர் ருல்சி கப்பார்ட் கடந்த மார்ச் மாதம் காங்கிரஸ் கமிட்டி ஒன்றின் முன்பாக சாட்சியம் அளித்தபோது ஈரான் அணுவாயுதங்களை தயாரிக்கவில்லை என்று கூறினார். ஆனால், அவரும் அமெரிக்க புலனாய்வுச் சமூகமும் கூறவது தவறு என்று ட்ரம்ப் அலட்சியம் செய்தார்.

ஈரான் மீது நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த குண்டு வீச்சு தாக்குதல்ளை நியாப்படுத்துவதற்காக ட்ரம்ப் பொய் கூறினார் என்பதை மத்தியகிழக்கின் அண்மைய நிலைவரம் வெளிக்காட்டுகிறது. அதேவேளை, ருல்சி கப்பார்ட் காங்கிரஸ் கமிட்டிக்கு தான் அளித்த சாட்சியத்தை ஜனாதிபதி நிராகரித்ததை அடுத்து தனது முன்னைய கருத்தை தலைகீழாக மாற்றி ஈரான் சில மாதங்களில் அணுவாயுதங்களை தயாரிக்கக்கூடும் என்று கூறினார். நெருக்குதலின் விளைவாகவே அவர் அவ்வாறு தனது நிலைப்பாட்டை மாற்றியிருக்கக்கூடும்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஈராக்கை ஆக்கிரமிப்பதற்கு முன்னதாக அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயருடன் சேர்ந்து செய்த அதே தவறை ட்ரம்ப் தற்போது இஸ்ரேலிய பிரதமர் பென்சமின் நெதான்யாகுவுடன் சேர்ந்து ஈரானின் அணுத்திட்டம் தொடர்பான விவகாரத்தில் செய்திருக்கிறார் என்று தெரிகிறது. முதலாவது பதவிக்காலத்தில் அமெரிக்காவை போர்களில் சிக்க வைக்கவில்லை என்று தன்னைப் பற்றி பெருமை பேசிய ட்ரம்ப், இரண்டாவது பதவிக்காலத்தின் ஆரம்பக்கட்டத்திலேயே ஈரானுடன் போருக்குச் சென்றார் என்பதுடன் உலகின் மிகப்பெரிய வல்லரசின் ஜனாதிபதிக்கு எந்த வகையிலும் பொருந்தாத - தான் தோன்றித்தனமான தனது பேச்சுக்கள் மற்றும் செயற்பாடுகள் மூலமாக உலகில் பெரும் கொந்தளிப்பான சூழ்நிலையை தோற்றுவித்திருக்கிறார்.

பிரகடனப்படுத்தப்படாத ஒரு அணுவாயுத நாடும், இதுகாலவரையில் அணுகுண்டுத் தாக்குதல்களை நடத்தி பேரழிவை ஏற்படுத்திய ஒரேயொரு வல்லரசும் சேர்ந்து அணுவாயுதத்தை தயாரிப்பதாக தாங்கள் சந்தேகித்த ஒரு நாட்டின் மீது படுமோசமான குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தி நாசம் விழைவித்திருக்கின்றன. சர்வதேச சட்டங்களை கிஞ்சித்தேனும் பொருட்படுத்தாமல் போரைத் தொடங்குவதை மாத்திரமல்ல, போர்நிறுத்தத்தை எப்போது செய்வது என்பதையும் மத்திய கிழக்கில் இன்று அமெரிக்காவும் இஸ்ரேலுமே தீர்மானிக்கின்றன.

ஈரானிடம் அணுவாயுதம் கிடையாது என்பதனால் மாத்திரமே அமெரிக்காவும் இஸ்ரேலும் தைரியத்துடன் குண்டுவீச்சுக்களை நடத்தின என்றும் ஈரானிடம் ஒரு சிறிய அணுவாயுதமேனும் இருந்திருந்தால் இவ்விரு நாடுகளும் ஒருபோதுமே தாக்குதல்களை நடத்தியிருக்காது என்றும் பல சர்வதேச அவதானிகள் கூறுகிறார்கள். அதேவேளை, அணுவாயுத பரம்பல் தடுப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு இஸ்ரேல் மறுத்துவருவது அமெரிக்காவுக்கு ஒரு பிரச்சினையாக தெரியவில்லை.

அணுத்திட்டம் குறித்து ஏற்கெனவே ஐந்து சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்த அமெரிக்க அதிகாரிகளும் ஈரானிய அதிகாரிகளும் மீண்டும் சந்திப்பதற்கு திட்டமிட்டிருந்த தினத்துக்கு மூன்று தினங்கள் முன்னதாக ஜூன் 13 ஆம் திகதி ஈரான் மீது இஸ்ரேல் குண்டு வீச்சுக்களை நடத்தத் தொடங்கியது. அமெரிக்காவுடனும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சர்வதேச அணுசக்தி நிறுவனத்துடனும் ஒபாமா நிருவாக காலத்தில் ஈரான் செய்துகொண்ட அணுத்திட்ட உடன்படிக்கையில் இருந்து தனது முதலாவது பதவிக்காலத்தில் தன்னிச்சையாக வெளியேறிய ட்ரம்ப், தெஹ்ரானுடன் அதேபோன்ற உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ள விரும்புவதாக கூறினார். உடன்படிக்கை தொடர்பில் ட்ரம்ப் விதித்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதற்கு ஈரானிய அரசாங்கம் தயாராயிருக்கவில்லை.

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படுவதை விரும்பாத இஸ்ரேல், ஈரானின் அணுசக்தி மையங்கள் மற்றும் இராணுவக் கட்டமைப்புகள் மீது படுமோசமான குண்டு வீச்சுக்களை நடத்தியது. ஈரானின் இராணுவ உயர்தலைமைத்துவத்தின் பல தளபதிகள் அந்த தாக்குதல்களில் கொல்லப்பட்டார்கள். ஈரானுடனான தனது இராஜதந்திர முயற்சி களை சீர்குலைத்த அந்த தாக்குதல்களை கண்டிப்பதற்கு பதிலாக அமெரிக்க ஜனாதிபதி ஆதரித்தார். ஈரான் நிபந்தனையற்ற முறையில் சரணடைய வேண்டும் என்றும் அவர் அறிவித்தார்.

இஸ்ரேலுடன் ஈரான் தொடுத்திருக்கும் போரில் அமெ ரிக்கா இணைந்துகொள்வதா இல்லையா என்பதை இரு வாரங்களில் தீர்மானிக்கவிருப்பதாக அறிவித்திருந்த ட்ரம்ப், திடீரென்று ஈரானின் அணுசக்தி மையங்கள் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் அதிநவீன போர் விமானங்களை பயன்படுத்தி குண்டுவீச்சு தாக்கு தல்களை நடத்தினார். அணுவாயுதங்களை தயாரிப்பதில் ஈடுபட்டதாக சந்தே கிக்கப்பட்ட ஈரானின் சகல அணுசக்தி மையங்களும் துடைத்தெறி யப்பட்டு விட்டதாக பிரகடனம் செய்த அவர் தானா கவே போர்நிறுத்தத்தையும் அறிவித்தார்.

என்னதான் ஈரான் இஸ்ரேல் மீதும் மத்திய கிழக்கில் அமெரிக்க இராணுவ தளங்கள் மீதும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியிருந்தாலும், அது இராணுவ ரீதியாக பெருமளவுக்கு பலவீனப்பட்டுவிட்டது என்பதே உண்மை. ஈரானின் வான்பரப்பு இரு வாரங்களாக இஸ்ரேலின் ஆதிக்கத்திலேயே இருந்தது. தனது போர்நிறுத்த அறிவிப்பை அலட்சியம்செய்து இஸ்ரேல் தொடர்ந்தும் ஈரான் மீது நடத்திய தாக்குதல்களினால் ட்ரம்ப் ஆத்திரமடைந்ததை அடுத்து இஸ்ரேலும் போர்நிறுத்தத்துக்கு இணங்கியது.

இஸ்ரேலிய பிரதமர் நெதான்யாகுவை பொறுத்தவரை, காசாவில் இனப்படுகொலையை தொடருவதும் ஈரானுடன் மோதுவதும் உள்நாட்டில் அவரின் அரசியல் அதிகார இருப்புடனும் சம்பந்தப்பட்டதாகும். அணுத்திட்டம் தொடர்பில் உடன்படிக்கை ஒன்றைச் செய்வதன் மூலமாக வாஷிங்டனுடன் தெஹ்ரான் இணக்கப் போக்கை கடைப்பிடிக்கத் தொடங்கினால் அது இஸ்ரேலின் நலன்களுக்கு பாதகமானது என்று நெதான்யாகு நினைத்தார்.

இதுவரை காலமும் அமெரிக்கா போன்ற வல்லரசுகள் மாத்திரமே தங்களுக்கு எதிரான நாடுகளில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவது குறித்துப் பேசிவந்தன. ஆனால், அமெரிக்காவை நம்பியிருக்கின்ற சிறிய நாடான இஸ்ரேல் கூட ஈரானில் ஆட்சிமாற்றம் குறித்து பேசுகின்ற அளவுக்கு நிலைவரம் மாறியிருக்கிறது. போர்நிறுத்தத்துக்கு இணங்கிக்கொண்ட போதிலும், அமெரிக்கா மீண்டும் தாக்கினால் மத்திய கிழக்கில் உள்ள அதன் இராணுவத் தளங்களை தாக்கப் போவதாக ஈரானிய அதியுயர் தலைவர் அயத்தொல்லா அலி காமெனி கடந்த வியாழக்கிழமை எச்சரிக்கை செய்தார்.

பலவீனமான ஒரு ஈரான் அமெரிக்காவின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு உடன்படிக்கையில் கைச்சாத்திட முன்வரும் என்று ட்ரம்ப் எதிர்பார்க்கிறார். அமெரிக்கா நடத்திய குண்டுவீச்சுக்களினால் ஈரானின் அணுசக்தி மையங்களுக்கு எந்தளவுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கும் என்பது குறித்து ட்ரம்ப் நிருவாகத்திற்குள் முரண்பாடான அபிப்பிராயங்கள் இருக்கின்றன. பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதை தவிர, ஈரானுக்கு வேறு மார்க்கமே கிடையாது என்று ட்ரம்ப் கூறுகின்ற அதேவேளை, அணுவாயுத பரவல் தடுப்பு உடன்படிக்கையில் இருந்து

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீடித்திருக்கக்கூடிய மாற்றத்துக்கான கருத்தொருமிப்பை கட்டியெழுப்புதல்!



கலாநிதி ஜெகான் பெரேரா

சமகாலத்தின் அறிகுறிகளை புரிந்து கொள்வதில் அரசாங்கம் முன் அவதானத்துடனும் நல்லறிவுடனும் நடந்து கொள்கிறது. நாடு தொடர்ந்தும் பொருளாதார நெருக்கடியில் உழன்று கொண்டிருக்கிறது. கடந்த 76 வருடங்களாக இலங்கையை ஆட்சிசெய்த எதிர்க்கட்சிகளின் கூட்டு ஒன்றுக்கு முகங்கொடுப்பதில் அரசாங்கம் வெல்லமுடியாத சவால்களை எதிர்நோக்குகிறது. அமெரிக்காவும் இஸ்ரேலும் கூட்டாக சர்வதேச சட்டத்தை அப்பட்டமாக அவமதித்து ஈரானின் அணு வசதிகள் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்திவரும் நிலையில், உலகம் பெரும் நெருக்கடியில் சிக்கியிருக்கிறது.

இத்தகைய கொந்தளிப்பான நிலைவரத்துக்கு மத்தியில், மிகவும் நிதானமாக செயற்பட வேண்டியதும் கோட்பாட்டு அடிப்படையில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான பரிசோதனையில் யதார்த்த நிலைவரத்தை புரிந்துகொள்ளாமல் செயற்படுவதை தவிர்க்க வேண்டியதும் அவசியமானதாகும். குறிப்பாக, சிறிய மற்றும் அபிவிருத்தி குன்றிய நாடுகளின் அரசாங்கங்கள் உலக அதிகார அரசியலினால் திணிக்கப்படுகின்ற கட்டமைப்பு ரீதியான நெருக்குவாரங்களுக்கு மத்தியில், அவற்றின் கோட்பாட்டு நோக்குகளில் சமநிலையைப் பேணுவது அவசியமாகும்.

சர்வதேச அதிகார கட்டமைப்பை அரசாங்கம் முழுமையாக உணர்ந்திருக்கிறது போன்று தெரிகிறது. பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்வதற்கான முயற்சிகளில் அரசாங்கம் கடைப்பிடிக்கின்ற முறைகளில் இதை காணக்கூடியதாக இருக்கிறது.

அரசாங்க தலைமைத்துவத்தின் கோட்பாடு மார்க்சியத்தில் வேர்கொண்டதாக இருந்தாலும், புதிய பாதை ஒன்றை வகுப்பதற்காக உலக முதலாளித்துவ முறைமையையும் சர்வதேச நாணய நிதியம் போன்ற அதன் அதிகாரக் கட்டமைப்புக்களையும் இன்னமும் விமர்சனம் செய்யவில்லை. பதிலாக, பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்வதற்கு சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த யோசனைகளுக்கு இசைவாக அரசாங்கம் செயற்படுகின்றது. அத்தகைய தந்திரோபாயம் 'சமநிலையான நடத்தை' என்று கட்டமைப்பு யதார்த்தவாத கோட்பாட்டாளர்கள் வர்ணிக்கின்ற போக்குடன் ஒத்துப் போகிறது. உலக நிறுவனங்களின் அதிகாரத்தை விளங்கி ஏற்றுக்கொண்டு அவற்றுக்கு இசைவான முறையில் தேசிய கொள்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

உலக நிதிமுறைமையின் கண்ணாடி வில்லையின் ஊடாக நோக்கும்போது சர்வதேச நாணய நிதியம் அமெரிக்கா தலைமையிலான தற்போதைய சர்வதேச பொருளாதார அதிகாரக் கட்டமைப்பை உருவகப்படுத்தி நிற்கிறது. இலங்கை மக்கள் தாங்கிக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்ற பொருளாதார இடர்பாடுகளின் சுமையை சமுதாயத்தின் சகல பிரிவினரும் ஒப்புரவான முறையில் பகிர்ந்து கொள்ளவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் யோசனைகள் அந்த ஒப்புரவற்ற சுமையை குறைக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்க தலைமையிலான அரசாங்கத்தினால் இணங்கிக்கொள்ளப்பட கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கையின் நிபந்தனைகளில் பெரும்பாலானவற்றை அரசாங்கம் நிறைவேற்றுகின்றது.

பொருளாதார நெருக்கடியை கையாளுவதற்கு ஒப்பேறக்கூடிய மாற்றுவழி இல்லை என்பதை ஏற்றுக் கொண்டதன் விளைவாகவே சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை பின்பற்றுவதற்கு அரசாங்கம் உறுதி பூண்டது. 2025 ஜூன் 15 -- 16 இலங்கைக்கு விஜயம் செய்த சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்டத் தூதுக்குழு மிகவும் சாதகமான முறையில் வரவேற்கப்பட்டது. அந்த தூதுக்குழு இலங்கையில் நடத்திய பேச்சுவார்த்தைகள் இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பதற்கு சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த திட்டம் மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஏற்கெனவே முன்னெடுக்கப்பட்டு வரும் பேச்சுவார்த்தைகளின் ஒரு அங்கமேயாகும்.

இலங்கை சர்வதேச கடனை திருப்பிச் செலுத்த முடியாமல் அண்மைக்காலத்தில் தவணைதவறிய, சர்வதேச வங்குரோத்து நிலையை பிரகடனம் செய்த, சுமார் 70 சதவீத பணவீக்கத்தை அனுபவித்த, வறுமை மட்டம் இரண்டு மடங்காக அதிகரித்து சனத்தொகையில் கால் பங்கினர் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழுகின்ற ஒரு நாடு என்ற வகையில், அரசாங்கம் வரக்கூடிய இடர்பாடுகளை துணிந்து ஏற்றுக்கொண்டு செயற்படக்கூடிய நிலையில் இல்லை. அதன் பொருளாதாரத்தையும் மக்களின் வாழ்வையும் பாதுகாக்கும் முகமாக அரசாங்கத்துக்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு தேவையாகிறது.

கடந்த காலத்தில் இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னெடுத்த 16 செயற்திட்டங்களில் சுமார் அரைவாசி தோல்வி கண்டது. நிபந்தனைகளை அரசாங்கங்கள் நிறைவேற்றத்தவறியதே அதற்கு காரணமாகும். அதைச் சுட்டிக்காட்டிய சர்வதேச நாணய நிதியம் 'கொள்கைத் தவறுகளுக்கு இனிமேல் இடமிருக்க முடியாது" என்று எச்சரிக்கை செய்திருக்கிறது. பாரம்பரியமான மார்க்சிய அடிப்படையிலான விமர்சனம் ஏன் ஓரங்கட்டப்பட்டது என்பதை இந்த முறைப்பான நினைவூட்டலும் எச்சரிக்கையும் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது சர்வதேச நாணய நிதியத்தின் முதலாவது பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் கீதா கோபிநாத் இதை குறிப்பிட்டிருந்தார்.



**பாராளுமன்றத்திலும் சிவில் சமூகத்துடனும் நடத்தப்படும் பொதுப் பேச்சுவார்த்தைகள், கலந்தாலோசனைகளை ஆதாரமாகக் கொண்டவையாக சீர்திருத்தம் அமையாத பட்சத்தில், சீர்திருத்த நடவடிக்கைகள் நிலைபேறானவையாக இருக்கப்போவதில்லை.**



ஆனால், பொருளாதார நெருக்கடி மாத்திரம் தான் இலங்கை உலக மட்டத்தில் எதிர்நோக்குகின்ற பிரச்சினை அல்ல. மூன்று தசாப்த கால உள்நாட்டுப் போரின்போது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களின் விளைவாக இலங்கை அதன் சர்வதேச நியாயப்பாட்டை பொறுத்தவரையிலும் நெருக்கடியை எதிர்நோக்குகிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வொல்கர் டேர்க் இலங்கைக்கு வந்திருக்கிறார். 2016 ஆம் ஆண்டுக்கு பிறகு மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் ஒருவர் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதல் விஜயமாக இது அமைகிறது. சர்வதேச நாணய நிதியத்தை கையாண்டதை போன்று வொல்கர் டேர்க்கின் விஜயத்தையும் நேர்மறையானதாக்குவதற்கு அரசாங்கம் சகல முயற்சிகளையும் எடுக்கின்றது போன்று தோன்றுகிறது.

இலங்கைச் சமூகத்தின் பரந்தளவிலான பிரிவுகளைச் சந்தித்து பேசுவதற்காக மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நாட்டின் வடக்கு, கிழக்கிற்கு செல்வதற்கும் வசதி செய்யப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் செம்மணியில் கண்டறியப்பட்ட மனித பதைகுழியையும் அவர் பார்வையிடுவார். உண்மையில் அரசாங்கம் கொள்கை கோட்பாடுகளுக்கு அப்பால் நடைமுறைச் சாத்தியமான அரசியல் தீர்மானங்களை நுண்ணியமான முறையில் எடுப்பதை இங்கு காணக்கூடியதாக இருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் உலகப் பொருளாதார மரபுடன் அரசாங்கம் அதன் மார்க்சிய வேர்களைச் சமநிலைப்படுத்துவதுகின்ற அதேவேளை, ஐக்கிய நாடுகள் தலைமையிலான சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு செயன்முறையுடனும் ஊடாட்டத்தைச் செய்கிறது.

மனித உரிமைகள் ஆணையாளர் செம்மணி மனித புதைகுழிக்கு செல்வது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். இலங்கை பாதுகாப்பு படைகள் போர்க் குற்றங்களைச் செய்ததாக முன்வைக்கப்படும் குறாறச்சாட்டுக்கள் கடந்த காலத்தைக் கையாளுவதில் மிகவும் சர்ச்சைக்குரிய - மக்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்துகின்ற ஒரு அம்சமாகும். மூன்று தசாப்தகால போரில் ஈடுபட்ட படையினரை அரசியல் தலைவர்களும் பெரும்பான்மைச் சமூகத்தினரும் 'போர் நாயகர்கள்' என்று அழைக்கிறார்கள்.

போரில் ஈடுபட்ட பாதுகாப்பு படைகளின் அதிகாரிகளை தண்டிப்பதற்கு கடுமையான உணர்வுபூர்வமான அரசியல் எதிர்ப்பு இருக்கிறது. பல்வேறு நாடுகளிலும் வெவ்வேறு காலகட்டங்களிலும் உண்மை ஆணைக்குழுக்கள் மற்றும் குற்றவழக்கு தொடர்வுகள் போன்ற விவகாரங்கள் கூட்டு நினைவு, தேசிய அடையாளம், பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைகள் ஆகியவற்றுக்கிடையில் ஒரு சமநிலையைப் பேணுவதிலேயே தங்கியிருக்கிறது. அவற்றை மிகுந்த விழிப்போடு நிதானமாகக் கையாளாத பட்சத்தில் சமூக வேற்றுமைக்கு பெரும்பாலும் வழிவகுத்துவிடும்.

சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்டத் தூதுக்குழுவின் விஜயத்தை விடவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் விஜயம் அரசியல் ரீதியில் உணர்ச்சிபூர்வமான ஒன்றாக இருக்கிறது. நிதியியல் இலக்குகளை உறுதியாகப் பின்பற்றுவதற்கும் பொருளாதார சீர்திருத்தங்களைச் செய்வதற்கும் அரசாங்கத்துக்கு ஊக்கம் கொடுப்பதே சர்வதேச நாணய நிதியத் தூதுக்குழுவின் விஜயத்தின் நோக்கமாகும். அதில் உணர்ச்சிவசமான பிரச்சினைக்கு இடமில்லை. ஆனால், இதிலும் கூட, அரசாங்கம் கடந்து செல்லாத சில கோடுகள் இருந்தன. நஷ்டத்தில் இயங்கும் தேசிய விமானசேவை உட்பட அரச சொத்துக்களை தனியார்மயமாக்குவது தொடர்பான பிரச்சினை அவற்றில் ஒன்று.

அரச சொத்துக்களில் சிலவற்றை விற்கப்போவதில்லை என்ற அதன் கொள்கையில் அரசாங்கம் தொடர்ந்தும் உறுதியாக இருக்கிறது. உண்மையில், மறுசீரமைப்புக்கான தேவையை ஏற்றுக்கொள்கின்ற போதிலும் கூட, தேசிய சொத்துக்களை பாதுகாக்க வேண்டிய தேவையை ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க அழுத்திக் கூறியிருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் விஜயம் கடந்த காலத்தை கையாளுவதுடன் (காணாமல் போன பெரும் எண்ணிக்கையானவர்களுக்கு நேர்த்த கதியைக் கண்டறிதல், போர்க் குற்றங்களைச் செய்தவர்களை தண்டித்தல்) சம்பந்தப்பட்டது என்பதால் சர்வதேச நாணய நிதியத் தூதுக்குழுவின் விஜயத்தை விடவும் உணர்ச்சிபூர்வமானதாகவும் பெருமளவுக்கு மக்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்கிறது.

முன்னைய அரசாங்கம் ஒன்று 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30-1 தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியதன் மூலம் இந்த பிரச்சினைகளை கையாள முயற்சித்தது. ஆனால், எதிரணியிடமிருந்தும் சனத்தொகையில் தேசியவாத பிரிவுகளிடமிருந்தும் கிளம்பிய கடுமையான எதிர்ப்பின் விளைவாக அந்த அரசாங்கத்தினால் அந்த முயற்சியில் நீண்டதூரம் செல்ல இயலாமல் போய்விட்டது. சர்வதேச சமூகத்துடன் அடையாளப்படுத்தக்கூடிய பொது


(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீ.வீ.கே. அவமானப்படுத்தப்பட்டதற்கு தமிழரசுக் கட்சியே பொறுப்பு!

பனங்காட்டான்

## யாழ்ப்பாண நகர மேயர் 'ரிமோட் கன்ட்ரோலில்' இயங்குகிறாரா?




கடந்த வாரம் சகலராலும் முக்கிய மானதாக எதிர்பார்க்கப்பட்டது செம்மணி புதைகுழி தொடர்பான அணையா விளக்கு நிகழ்வும், மனித உரிமைகள் ஆணையக தலைவரின் யாழ்ப்பாணத்துக்கான நேரடி விஜயமும். எல்லாம் திட்டமிட்டவாறும், எதிர்பார்க்கப்பட்டவாறும் நடைபெற்ற வேளையில், எதிர்பாராத ஓர் அரசியல் ஆரவாரம் அதற்குள் நுழைந்து அனைத்தையும் திசைதிருப்பி விட்டது.

இந்த எதிர்பாராத சம்பவம் எதுவென்று குறிப்பிட வேண்டிய தேவையில்லை. சமூக ஊடகங்களின் ஆதிக்கம் உலகத்தின் பார்வையில் அனைத்தையும் நேரடியாகப் பார்க்க வைத்தது. ஆனால், உண்மையை உடனடியாக அறிந்து கொள்ள முடியவில்லை.

இவ்வாறான நிகழ்வு இடம்பெறுவதற்கு அத்திவாரம் போட்டது யாழ்ப்பாணம் மாநகர சபையை கைப்பற்றுவதற்கு தமிழரசு கட்சி எடுத்த முயற்சி என்பதை சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை. இதன் விளைவாக அவமானப்படுத்தப்பட்டதற்கு உள்ளாகியிருப்பவர் தமிழரசு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம்.

செம்மணி புதைகுழி இவரது இருப்பிடத்துக்கு மிக அண்மித்த ஓர் இடம். யாழ்ப்பாணம் மாநகர சபையில் ஆணையாளராகவும், விசேட ஆணையாளராகவும் இவர் பணியாற்றியுள்ளார். நாற்பத்தைந்தில் பதின்மூன்று ஆசனங்களை மட்டுமே பெற்ற யாழ்ப்பாண மாநகர சபை நிர்வாகம் தங்கள் கைகளை விட்டு செல்லக்கூடாது - அதாவது, தமிழரசின் கைகளுக்குள் வரவேண்டுமென்பதற்காக இவர் படியேறி இறங்கிய செயல், ஒரு சிலரால் இவரை அவமானப்படுத்த காரணமாகியுள்ளது.

ஈ.பி.டி.பி.யின் நான்கு ஆசனங்களுக்காக அவர்களை இணைத்ததைத் தவிர்த்து, கஜேந்திரகுமாரின் பன்னிரண்டு ஆசனங்களை இணைத்து அவர்களுக்கும் அரைவாசிக் காலத்தை பங்கு போட்டு மாநகர சபையை கைப்பற்றியிருக்கலாமே என்று சி.வி.கே.யிடம் சிலர் கேட்டதுண்டு. தாங்கள் கஜேந்திரகுமாரிடம் அதனை கேட்டதாகவும், அதற்கு அவர் மறுத்துவிட்டதாகவும் இதற்கான பதில் அவரிடமிருந்து வந்திருக்கிறது.

சரி, அதுபோகட்டும். தேர்தல்கால சகல முடிவுகளுக்கும் அதற்கான ஏற்ற இறக்க முயற்சிகளுக்கும் தாமாகவே முடிவெடுத்த கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் டக்ளசிடம் சென்றிருக்கலாமே என்ற கேள்விக்கு, சுமந்திரன் மறுத்துவிட்டார் அல்லது சுமந்திரன் போகமாட்டார் என்பதாக சி.வி.கே.யின் பதில் சில இடங்களில் வந்துள்ளது. அப்படியென்றால் கட்சியைக் காப்பாற்றவும், மாநகர சபையை கைப்பற்றவும் சி.வி.கே. பலிகடாவாக்கப்பட்டுள்ளார் என்றே எண்ணத் தோன்றுகிறது. இதனையும் சுமந்திரனின் கோட்பாடு என்றே குறிப்பிடலாம்.

யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியும், யாழ்ப்பாணம் மாநகர சபையும் ஒரே பிரதேசம். யாழ்ப்பாணத் தேர்தல் தெரிவும், மாநகர சபையின் தேர்தல் வெற்றியும் எப்போதும் தமிழரசு கட்சியின் ஆதரவுக் களமாக இருந்ததில்லை. இதனை நன்கறிந்த ஒரேயொருவர் சி.வி.கே. அவர்கள் மட்டும்தான். இதன் வரலாற்றை சுருக்கமாக இங்கு பார்க்கலாம்.

*1947ம் ஆண்டு, 1952ம் ஆண்டு, 1956ம் ஆண்டு பொதுத்தேர்தல்களில் யாழ்ப்பாணத் தொகுதியில் தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் தொடர்ச்சி*

**செம்மணியில் சீ.வீ.கே.சிவஞானம் அவமானப்படுத்தப்பட்டதற்கு அவரது செயல்பாடு காரணமல்ல. தமது கட்சிக்காக கதிரை பிடிக்கப் போனதற்று இவருக்குக் கிடைத்த பரிசு இது. இதனால் கட்சியை காப்பாற்ற வேண்டுமென சிந்தனையின்றி குட்டித் தலைவர்கள் இருவரும் மௌனம் காப்பது ஏன்? இந்தப் பிரச்சனை எழவே காரணமான யாழ்ப்பாண நகர மேயர் கதிரையில் இருப்பவர் 'ரிமோட் கன்ட்ரோலில்' இயங்குவதாகக் கூறப்படுவது உண்மையா?**



*யாக வெற்றிபெற்றார். 1960ம் ஆண்டின் மார்ச் மாதத்திலும் ஜூலையிலும் இடம்பெற்ற பொதுத்தேர்தல்களில் யாழ்நகர மேயராக அல்பிரட் துரையப்பா வெற்றி பெற்றார். 1965ம் ஆண்டுத் தேர்தலில் ஜி.ஜி.பொன்னம்பலம் மீண்டும் தொகுதியைக் கைப்பற்றினார். 1970ம் ஆண்டு தேர்தலிலேயே முதன்முறையாக தமிழரசுக் கட்சி வேட்பாளரான சி.எக்ஸ்.மார்ட்டின் இங்கு வெற்றிபெற முடிந்தது.*

ஆனால், 1972ல் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் சுதந்திர கட்சி ஆட்சியில் புதிய அரசியலமைப்பை ஏற்று இயங்கியதால் மார்ட்டின் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். தமது மனச்சாட்சிக்கு ஏற்பதாம் வாக்களித்ததாக அவர் கூறியதால் அவரை, 'மனச்சாட்சி மாடின்' என்று தமிழரசு கட்சியும், கட்சிப் பத்திரிகையான சுதந்திரனும் வாட்டியெடுத்தன.

யாழ்ப்பாணம் தொகுதியில் 1947ல் ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளராக அருணாசலம் மகாதேவா போட்டியிட்டு தோல்வியுற்றார். 1952, 1956 தேர்தல்களில் தமிழரசு கட்சி நிறுவனர்களில் ஒருவரான டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதன் இங்கு போட்டியிட்டு தோல்வி கண்டார். (இதன் பின்னரே நல்லூர் தொகுதியில் போட்டியிட்டு இவரால் வெற்றி பெறமுடிந்தது). 1960ம் ஆண்டின் இரண்டு தேர்தல்களிலும் யாழ்ப்பாணத் தொகுதியில் தமிழரசு வேட்பாளராக சி. கதிரவேற்பிள்ளை போட்டியிட்டு தோல்வியடைந்தார். (இதன் பின்னரே கோப்பாய் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்).

1975ல் தமிழரசு, தமிழ் காங்கிரஸ் ஆகியவை இணைந்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி உருவான பின்னரே அதன் வேட்பாளராக [illegible] வேலு யோகேஸ்வரனால் யாழ்ப்பாணத்தில் வெற்றிபெற முடிந்தது. இந்த வரலாற்றை மீள்நோக்கின் தமிழரசு கட்சிக்கு யாழ்ப்பாணத் தொகுதி ஒவ்வாமையாக இருந்ததை புரிந்து கொள்வது இலகுவாகும்.

யாழ்ப்பாண மாநகர சபையின் வரலாறும் இவ்வாறானதே. 1923ல் பட்டினக் கவுன்சிலாக உருவாகி, 1940ல் பட்டினசபையாகி, 1949ல் இது மாநகர சபையானது. கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளில் சுமார் இருபது வரையான மேயர்கள் பதவி வகித்துள்ளனர். முதலாவது மேயராகத் தெரிவான சாம் ஏ.சபாபதி தொடக்கம் 1975ல் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி உருவாகும் வரையான காலகட்டத்தில் இங்கு மேயராகப் பதவி வகித்தவர்களில் ஒரு கை விரலுக்கு உட்பட்டவர்களே தமிழரசு கட்சியினர் என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

இந்தப் பின்னணியைப் பார்க்கையில், இம்முறை எவ்வாறாவது மாநகர ஆட்சிக் கதிரையை கைப்பற்ற வேண்டுமென தமிழரசுக் கட்சி திட்டமிட்டதில் நியாயம் உண்டு. ஆனால், அதற்காக யாருடன் சேர வேண்டுமென்பதை அவர்கள் உணராமல் போனதே பலரது புருவத்தையும் உயர வைத்தது.

2018ம் ஆண்டில் தங்களின் ஆனோல்டை இங்கு மேயராக்குவதற்கு ஈ.பி.டி.பி.யின் ஆதரவை தமிழரசு கட்சி பெற்றது. ஆனால், இது காதும் காதும் வைத்ததுபோல காரியமாக்கப்பட்டது. இம்முறை தமிழரசு ஆதரவு கேட்டால் அவ்வாறு இடம்பெறக் கூடாது என்று டக்ளஸ் விரும்பியதும், ஜனநாயக தமிழ் கூட்டணியின் தலைவர் சித்தார்த்தன் டக்ளசை சந்தித்து தாங்கள் இணைந்திருக்கும் கஜேந்திரகுமாரின் பேரவைக்கு ஆதரவை பெற்றுவிடுவதற்கு முன்னர் தாங்கள் அதனை பெற்றுவிட வேண்டுமென்ற அரசியல் விளையாட்டு சி.வி.கே. அவர்களுக்கு வினையாகி விட்டது. இதன் விளைச்சலையே செம்மணி அணையா விளக்கில் அவருக்கு புரிய வைக்கப்பட்டது.

செம்மணி நிகழ்வுக்கு சி.வி.கே. அவர்கள் இரண்டாம் நாளும் சென்றிருந்தார். எவ்வித அசம்பாவிதமும் இடம்பெறவில்லை. மூன்றாம் நாள் சென்றார். மலரஞ்சலி நிகழ்த்தினார். சில நிமிடங்கள் அங்கு தங்கிவிட்டு வாகனத்தை நோக்கி செல்லும்போதே ஒரு சிலரால் தகாத வார்த்தைகளால் நிந்திக்கப்பட்டார். அணையா விளக்கு ஏற்பாட்டாளர்கள் தங்களால் முடிந்தவரை நிலைமையை கட்டுப்படுத்தி நிலைமையை பாதுகாத்தனர். இதுவெல்லாம் தெரிந்த விடயங்கள்.

அசம்பாவிதத்தை முன்னின்று செயற்படுத்தியவர் சில காலத்துக்கு முன்னர் தமிழரசுக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டவர் என்று சி.வி.கே. பகிரங்கமாகக் கூறுகிறார். அந்த நபர் இப்போது கிளிநொச்சி சிறிதரனுடன் நெருக்கமாக இருந்து வருகிறார். தம்மைக் கட்சியிலிருந்து நீக்கியதற்காகவே பொதுவெளியில் சி.வி,கே. அவர்களை பழிவாங்க வேண்டுமென இவர் விரும்பியுள்ளார். இதனால் சிலவேளை அவர் மகிழ்ந்திருக்கலாம். ஆனால் இச்சம்பவம் முழுத்தமிழரையும் தலைகுனிய வைத்திருக்கிறது என்பதை அவர் அறிவாரோ தெரியாது.

தமது ஆதரவாளரின் தகாத செயலுக்காக சிறிதரன் சி.வி.கே.யிடம் தனிப்பட்ட முறையில் வருத்தம் தெரிவித்ததாக சொல்லப்படுகிறது. ஆனால், இதனை பகிரங்கமாக அல்லது ஊடகங்கள் வாயிலாக தெரிவிக்க அவர் ஏனோ விரும்பவில்லை. தொட்டதற்கெல்லாம் அறிக்கை விடுவதையே வாலயமாகக் கொண்ட கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரனும் இவ்விடயத்தில் எந்த அறிக்கையும் விடாது மௌனம் காக்கிறார். செம்மணியில் கிடைத்த அவமானம் தங்கள் கட்சிக்கானதல்ல என்று இரண்டு குட்டித் தலைவர்களும் எண்ணுகிறார்கள் போலும்.

இன்னொரு முக்கியமான விடயம் மாநகர சபையின் மேயராகத் தெரிந்தெடுக்கப்பட்ட பெண்மணியால் அதன் கூட்டங்களை நேர்த்தியாக நடத்த முடியாமலிருப்பது. ஒரு பெண்மணியை மேயராக்கியது நல்ல அறிகுறி. ஆனால் இவருக்கு இப்பதவியை வகிக்கக்கூடிய அரசியல் அனுபவமோ ஆளுமையோ இருக்குமா என்பது கேள்விக்குறியாகவுள்ளது. வெளியிலிருக்கும் யாரோ ஒருவரால் இவர் வழி நடத்தப்படுவதாக உறுப்பினர் ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேயர் பதவியை வகிப்பவர் தமக்கு நம்பிக்கையானவர்களின் ஆலோசனையை தேவைப்படும்பொழுது பெறுவது தவறல்ல. கட்சி அரசியலில் இது வழமையான முறை. அதற்காக, மக்களால் தெரிவாகி, கட்சியால் கதிரையில் அமர்த்தப்பட்டவர் 'ரிமோட் கன்ட்ரோலில்' இயங்குவது நீண்ட காலத்துக்கு அக்கதிரையில் தங்க விடாது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழரின் தொன்மையை மறைக்க முயற்சி!

பழ. நெடுமாறன்

தமிழ்நாடு, கீழடி அகழாய்வு முடி வுகளை அங்கீகரிக்க அறிவி யல் ரீதியான தரவுகள் தேவை என்று இந்திய மத்திய அர சின் கலாசார மற்றும் சுற்று லாத் துறை அமைச்சர் கஜேந் திர சிங் ஷெகாவத் கூறியுள் ளார். மேலும், 'கீழடி அக ழாய்வு குறித்து அளிக்கப் பட்டுள்ள அறிக்கைகள் அறி வியல்பூர்வமானவை அல்ல. அவற்றுக்கு அங்கீகாரம் வழங் குவதற்கு முன்பு மேலும் பல ஆய்வுகள் செய்யப்பட வேண்டும். கூடுதல் தகவல் கள், சான்றுகள், கூடுதல் அறி வியல்பூர்வமான ஆய்வுகள் தேவைப்படுகின்றன' என் றும் அவர் கூறியுள்ளார்.

கீழடியில் 2014 - 2015 மற்றும் 2015 - 2016 ஆகிய ஆண்டுகளில் இந்தியத் தொல் லியல் துறை அதிகாரியான முனை வர் அமர்நாத் இராம கிருட்டிணன் தலைமையில் வைகையாற்றின் தோற்று வாயிலிருந்து அது கடலில் கலக்கும் இடம்வரை இருக ரைகள் நெடுகிலும் ஆய்வு நடத்தப்பட்டு 293 தொல்லி யல் ஆய்வு சுவடுகள் கண்ட றியப்பட்டன. இவற்றில் மதுரை அருகே கீழடி என்ற இடத்தைத் தேர்ந்தெடுத்து முதலில் தொல்லியல் ஆய்வு நடத்தப்பட்டது. இதன்மூலம் 5,800-க்கும் மேற்பட்ட தொல்பொருள்கள் கண்டறியப்பட்டன.

முதன்முதலாக செங்கற்களால் கட்டப் பட்ட கட்டடங்களின் சுவடுகள் கண்ட றியப்பட்டன. ஓடுகள், உறைக்கிணறு கள், கழிவுநீர் கால்வாய்கள் மற்றும் தமிழ் பிராமி எழுத்துப் பொறிப்புகள் அடங்கிய ஏராளமான பானை ஓடுகளும் கண்டறி யப்பட்டன. அதில் ஒரு பானை ஓட்டில் மீன் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. பாண்டியரின் சின்னமான மீன் சின்னம் கிடைத்ததால் இது பண்டைய மதுரை யாக இருந்திருக்கலாம் என்பது தெளிவா கிறது.

மேலும், அங்கு கண்டறியப்பட்ட பழம்பொருள்களின் மூலம் கீழடி நாகரி கம் ஒரு நகர்ப்புற நாகரிகமே என்பது நிறுவப்பட்டுள்ளது. இதன் காலம் கி.மு. 6-ஆம் நூற்றாண்டு என்பதும் தமிழகத் தின் தொல்லியல் ஆய்வு வரலாற்றில் இது ஒரு மாபெரும் கண்டுபிடிப்பாகும் என்பதும் வரலாற்றுபூர்வமான உண்மை களாகும்.

1926-ஆம் ஆண்டில் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தின்போது சிந்து மாநிலத் தில் சர் ஜான் மார்ஷல் என்ற தொல்லி யல் அதிகாரி நடத்திய அகழாய்வில் சிந் துவெளி நாகரிகம் கண்டறியப்பட்டது. இந்திய வரலாற்றில் ஆரியர் இந்தியா வில் அடியெடுத்து வைப்பதற்கு முன்பே மிகத் தொன்மையான நாகரிகம் இது என்பதை உலகம் உணர்ந்தது. இயற்கை காரணங்களினால் சிந்துவெளி நாகரிகம் அழிந்து 1,000 ஆண்டுகளுக்குப் பின்னரே ஆரியர்கள் இந்தியாவுக்குள் அடியெடுத்து வைத்தனர் என்பதையும் உலகம் உணர்ந் தது.

சிந்துவெளி நாகரிகம் கண்டுபிடிக்கப் பட்ட 88 ஆண்டுகளுக்குப் பின்னர் கண் டறியப்பட்ட மிகத் தொன்மையான நாக ரிகம் கீழடி வைகைக்கரை நாகரிகமே என்பது நிலைநாட்டப்பட்டது. சிந்து சமவெளி அகழாய்வில் குதிரையின் எலும்பு கிடைக்கவில்லை. அதைப்போ லவே கீழடியிலும் குதிரை எலும்பு கிடைக் கவில்லை. எனவே, இந்த இரு நாகரிகங்க ளும் ஆரியர் வருகைக்கு முற்பட்ட நாகரி கங்களாகும்.

தமிழர்களின் தொன்மை வெளி உலகுக்கு தெரிந்துவிடக் கூடாது என்பதற்காகவே தமிழ்நாட்டில் நடைபெற்ற அகழாய்வு பற்றிய உண்மைகள் தொடர்ந்து மறைக்கப்படுகின்றன.

இதற்கான தரவுகளைத் தொகுத்து ஆராய்ந்ததுடன், அங்கு கிடைத்த 4,000-த்துக்கும் மேற்பட்ட தொல்பொருள் களை மிகப் பாதுகாப்புடன் வைத்து, அவற்றில் விலங்குகளின் எலும்புகளை புணேவில் உள்ள டெக்கான் கல்லூரி அகழாய்வு பரிசோதனைக்கூடத்துக்கு அனுப்பி அறிவியல்பூர்வமாக ஆராயப் பட்டு அறிக்கை அளித்துள்ளனர். பசு, காளை, பன்றி, மான் போன்ற பல்வேறு விலங்கினங்களின் எலும்புகள் இவை என அந்த பரிசோதனைக்கூடம் அதிகார பூர்வமாக தெரிவித்துள்ளது.

புதுச்சேரியில் உள்ள 'பிரெஞ்சு பேலி னாலஜி மற்றும் பேலியோஈகாலஜி பரி சோதனைக்கூடத்தில் பணியாற்றிவரும் அறிவியல் அறிஞர்களால் நன்கு ஆரா யப்பட்டு அறிக்கை கொடுக்கப்பட்டுள் ளது. அதேபோல அமெரிக்காவில் உள்ள 'பீட்டா அனலிட்டிக்' மையத்துக்கு சில பொருள்கள் இந்திய அரசினால் அனுப்பி வைக்கப்பட்டு அந்த மையம் 'ரிப்போர்ட் ஆஃப் ரேடியோகார்பன் டேட்டிங் அன லைஸிஸ்" என்ற ஆய்வறிக்கையை அளித் துள்ளது.

இந்தியாவில் புணே, புதுச்சேரி ஆகிய இடங்களில் அமைந்திருக்கும் தரம்வாய்ந் ததும், இந்திய அரசினால் ஒப்புக்கொள் ளப்பட்டதுமான ஆய்வு மையங்களும், அமெரிக்காவில் உள்ள ஆய்வு மையமும் கீழடியில் கிடைத்த பழம்பொருள்களை ஆராய்ந்து கி.மு. 6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனத் தெளிவான அறிக்கையை அளித்துள்ளன.

மேலும், அங்கு கிடைத்த பானை ஓடு களிலும், தங்கக் கட்டிகளிலும் பொறிக் கப்பட்டிருந்த பிராமி தமிழ் எழுத்துக ளின் மூலம் அவை கி.மு. 2-ஆம் நூற் றாண்டைச் சேர்ந்தவை என்பது கண்டறி யப்பட்டது. தமிழ் பிராமி எழுத்து தமிழ் நாட்டில் தோன்றி இந்தியாவின் மற்ற பகுதிகளுக்குச் சென்றிருக்க வேண்டுமெ னச் சிந்துவெளி அறிஞரான மறைந்த ஐரா வதம் மகாதேவன் ஏற்கெனவே கூறியுள் ளார். ஏனெனில், தமிழகத்தில் மட்டும் தான் எங்கு தோண்டினாலும் பானை ஓடுகளில் தமிழ் பிராமி எழுத்துகளைப் பார்க்க முடியுமே தவிர, இந்தியாவில் வேறெங்கும் இதுபோன்ற எழுத்து முறை யைப் பார்க்க முடியாது.

அசோகர் காலத்தில் அவர் வெளியிட்ட பெரிய சாசனங்களை நாம் பார்க்கலாம். அரசரின் சாசனம் யார் வேண்டுமானா லும் எழுதிக் கொடுத்து யார் வேண்டு மானாலும் வெளியிடலாம். ஆனால், ஒரு பானையில் ஒரு பெயர் பொறிக்கப் பட்டிருக்கிறது என்றால், எளிய மாந்தன் ஒருவன் தன்னுடைய பெயரைப் பொறித் துவைக்கக்கூடிய ஆற்றலைப் பெற்றுள் ளான் என்பது தெரிவதுடன், அந்தக் காலத்தில் வாழ்ந்த சமுதாயம் கல்வி அறி வுமிக்க சமுதாயமாக இருந்தது என்பதை இந்த ஆதாரம் விளக்குகிறது.

எழுத்து என்பது உடனடியாக உருவா கிவிடாது. முதலில் குறியீடுகள் மக்களால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். பிறகு அந்த குறியீடுகளே எழுத்தாக மாற்றம் பெற்றிருக்க வேண்டும். கீழடியின் நடுப் பகுதியில் குறியீடுகளும், மேற்பகுதிக்கு வரும்போது எழுத்துகளும் கிடைத்துள்ளன.

புதுவை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முனைவர் கே. இராசன், கொடுமணல், பொருந்தல் ஆகிய இடங்களில் மேற் கொண்ட ஆய்வுகள் தமிழகத் தொல்லி யல் ஆய்வில் மாபெரும் திருப்பத்தை ஏற்படுத்தின. அசோகர் பிராமிக்குப் பின் தோன்றிய எழுத்தமைப்பே தமிழி என் னும் தமிழ் பிராமி எழுத்தாகும் என்ற கரு துகோளை அவருடைய ஆய்வு தகர்த்தது.

பொருந்தலில் பானை ஓட்டுக் குறியீ டுகளையும் தொல்தமிழ் எழுத்துகளை யும் அவர் கண்டறிந்தார். அத்துடன் நெல் மணிகள் இருந்த பானையில் எழுத்துப் பொறிப்பு இருந்ததையும் கண்டறிந்து அந்த நெல்மணிகளைக் கனிம பகுப்பாய் வுக்கு அனுப்பி தமிழ் எழுத்தின் தொன்மை மேலும் 200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை நிறுவினார். அதாவது கி.மு.3-ஆம் நூற்றாண்டு எனக் கருதப்பட்டதை கி.மு.5-ஆம் நூற்றாண்டு என அவர் நிறு வினார்.

தமிழ் பிராமி எழுத்துமுறை தொல்த மிழேயாகும். இது வடமொழி பிராமி அல்ல என்று முதன்முதலில் எழுத்தாய் வுக்கான விதையை கே.வி. சுப்பிரமணிய ஐயர் ஊன்றினார் என்பது நினைவுகூரத் தக்கது.

வட இந்தியாவில் நடைபெற்ற எந்த தொல்லியல் ஆய்விலும் இதுபோன்ற பானை ஓடுகளிலோ அல்லது மற்ற பொருள்களிலோ எழுத்துப் பொறிப்பு கள் எதுவும் கிடைத்ததில்லை. அவை தமிழ்நாட்டில் மட்டும்தான் கிடைக்கின் றன. அதனால்தான் தொல்லியல் அறிஞர் கள் ஐராவதம் மகாதேவன், பேராசிரியர் இராசன் ஆகியோர் நம் பிராமி எழுத்து களைப் பொறுமையாக ஆய்வு செய்ய வேண்டும் என்று கூறினர்.

பாண்டியர்களின் சின்னமான மீன் சின்னம் பொறிக்கப்பட்ட பானை ஓடு கள் இங்கே கிடைத்துள்ளதால் இதுதான் பண்டை மதுரையாக இருக்கும் என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது. கீழடி யின் கால அளவைப் பார்த்தால் கி.மு.500 முதல் 10-ஆம் நூற்றாண்டு வரை இங்கு மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கிடைக்கின்றன.

கீழடியில் அகழாய்வு தொடக்கக் கட் டத்தில் கிடைத்த சான்றாதாரங்களை அடிப்படையாக வைத்து ஆய்வுக் குழுத் தலைவரான அமர்நாத் இராமகிருட்டி ணன் இடைக்கால அறிக்கை ஒன்றைத் தயாரித்து இந்தியத் தொல்லியல் ஆய்வு துறைக்கு அனுப்பினார். அது கிடைத்த வுடனேயே சில நாள்களில் அவரை அஸ ாம் மாநிலத்துக்கு இடமாற்றம் செய்தது இந்திய அரசு.

ஆய்வுக் குழுத் தலைவரை மேலும் தொடர்ந்து ஆய்வுகள் நடத்துவதற்கு அனுமதித்தால்தானே அமைச்சர் எதிர் பார்க்கும் முடிவுகள் கிடைக்கும். ஆக, கீழடி ஆய்வு குறித்த உண்மைகள் வெளி வரக் கூடாது என்ற நோக்கத்துடனேயே இந்திய அரசு செயல்பட்டிருக்கிறது என் பது தெளிவாகிறது.

இதற்கு முன்பாக ஆதிச்சநல்லூர் பகு தியில் அகழாய்வு நடத்தப்பட்டபோது, அங்கு கிடைத்த முதுமக்கள் தாழியில் மனித எலும்புக்கூடு ஒன்று முழுமையா கக் கிடைத்தது. அதை ஆய்வுக்காக மைசூ ருக்கு எடுத்துச் சென்றனர். அதன் முடிவு இன்றுவரை வெளியிடப்படவில்லை.

கி.பி. 2004-2005-ஆம் ஆண்டு ஆதிச் சநல்லூரில் பி. சத்தியமூர்த்தி தலைமை யில் நடைபெற்ற அகழாய்வு குறித்து அவர் அரசுக்கு அனுப்பிய அறிக்கையை யும் இன்றுவரை இந்திய அரசு வெளியி டாமல் மறைத்துள்ளது.

இது குறித்து சென்னை உயர்நீதிமன்ற தலையீட்டின் பேரில் இரண்டு பொருள் கள் பீட்டா ஆய்வகத்துக்கு அனுப்பிவைக் கப்பட்டு அதன் அடிப்படையில் அந்தப் பொருள்களின் காலம் கி.மு. 905 என்பது நிறுவப்பட்டது. ஆனால், சத்தியமூர்த்தி யின் அறிக்கை இன்னமும் வெளியிடப்ப டவில்லை.

தமிழர்களின் தொன்மை வெளி உல குக்கு தெரிந்துவிடக் கூடாது என்பதற் காகவே தமிழ்நாட்டில் நடைபெற்ற அக ழாய்வு பற்றிய உண்மைகள் தொடர்ந்து மறைக்கப்படுகின்றன. நல்லவேளையாக கீழடியில் நடைபெற்ற அகழாய்வைத் தொடர்ந்து அங்கு கிடைத்த பொருள்க ளின் காலம் கி.மு.6-ஆம் நூற்றாண்டு என்பதை தமிழக அரசின் தொல்லியல் ஆய்வுத் துறை நிலைநாட்டியுள்ளது.

இந்த ஆய்வு இன்னமும் தொடர வேண்டும். தொடர்ந்தால் இந்தியாவின் ஆதிகுடிகள் தமிழர்களே என்ற உண்மை நிலைநிறுத்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லைக்கு இன்று 75

♦ வீரகத்தி தனபாலசிங்கம்

வடமராட்சியில் எந்த சந்தியில் என்றாலும், எவரிடமாவது 'றிப்போர்ட்டரை' கண்டீர்களா என்று கேட்டால், அவர்கள் உடனே தில்லையைத்தான் கேட்கிறார்கள் என்றுஉடனடியாகவே பதில் சொல்வார்கள். அந்தளவுக்கு தில்லைநாதன் வடமராட்சியில் மகா பிரபல்யம். அங்கு மாத்திரமல்ல, யாழ்ப்பாணத்தின் சகல பகுதிகளிலும் பரவலாக அறியப்பட்ட மூத்த செய்தியாளர் அவர். கொழும்பிலும் கூட பிரதான தமிழ்ப் பத்திரிகை நிறுவனங்களில் வடபகுதி செய்தியாளர்களைப் பற்றி பேசும்போது தில்லையின் கதை வராமல் அந்த பேச்சு நிறைவுறாது.

அரைநூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக பத்திரிகைத்துறைக்கு தன்னை அர்ப்பணித்து இன்னமும் கூட சுறுசுறுப்புக் குறையாமல் செயற்பட்டுக்கொண்டிருக்கும் தில்லை என்று நாம் அன்புடன் அழைக்கும் சின்னத்துரை தில்லைநாதன் இன்று தனது 75 வது அகவையில் பிரவேசிக்கிறார். இதுவரையான முக்கால் நூற்றாண்டு வாழ்வில் அரைநூற்றாண்டுக்கும் அதிகமான காலத்தை தில்லை பத்திரிகைத்துறைக்கு அர்ப்பணித்திருக்கிறார்.

வடமராட்சி மந்திகையை பிறப்பிடமாகக்கொண்ட தில்லையுடன் சுமார் நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக எனக்கு நெருக்கமான நட்புறவு. அவரது எளிமையான சுபாவமும் நகைச்சுவையுணர்வு நிறைந்த பேச்சும் எவரையும் எளிதாக அவர்பால் கவர்ந்து விடும். தில்லைக்கு செய்தித்துறையில் நாட்டம் மிகவும் இளம் வயதில் அதாவது பள்ளிக்காலத்திலேயே முளைவிட்டு







விட்டது. அது ஒரு சுவாரஸ்யமான கதையும் கூட.


புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையில் தரம் ஐந்து படிக்கும்போது தில்லையின் வகுப்பாசிரியரான டி.எம்.இராசலிங்கம் அந்த வேளையில் வீரகேசரி, ஈழநாடு பத்திரிகைகளின் நிருபர். ஒய்வான நேர இடைவெளியில் வகுப்பில் வைத்தே செய்திகளை எழுதிவிட்டு தினமும் அவற்றை தபாலில் சேர்ப்பதற்காக மாணவர்களிடம் கொடுத்து அனுப்புவது அவர் வழக்கம். அவ்வாறு செய்திகளை தபாலில் சேர்க்கும் வேலையை விரும்பிச்செய்த மாணவர்களில் ஒருவர் தில்லை.

ஆசிரியர் மறந்தாலும் தில்லை அவரிடம் சென்று 'சேர் இன்று தபால் கந்தோருக்கு போகத்தேவையில்லையா' என்று தானாகவே கேட்டு செய்திகள் அடங்கிய தபாலுறைகளை வாங்கிக் கொள்வார். ஊரில் உள்ள புதினங்களை இந்த ஐந்தாம் வகுப்பு மாணவர்களிடம் கேட்டு அவற்றை செய்தியாக்குவதிலும் இராசலிங்கம் வல்லவராம். அவ்வாறு புதினங்களை அவருக்குச் சொல்வதில் தில்லைக்கு ஒரு பிரியம். தாங்கள் தபாலில் சேர்த்த செய்திகள் பத்திரிகைகளில் பிரசுரமாகியிருக்கிறதா என்று தேடி வாசிக்கும் ஆர்வத்தையும் தில்லை நாளடைவில் வளர்த்துக் கொண்டார். இவ்வாறு தான் பின்னாளில் பத்திரிகைத்துறையில் முழுமையாக தன்னை அர்ப்பணிப்பதற்கான விதையை ஊன்றிக் கொண்டதாக கூறுவார் தில்லை.

பாடசாலை முடிந்து வீடு திரும்பும்போது மந்திகை வைத்தியசாலைச் சந்தியை கடந்தே அவர் செல்லவேண்டும். வைத்தியசாலையை சூழவுள்ள பகுதிகள் விவசாயிகள் நிறைந்தது. அந்த சந்தியில் தினமும் 'குழைத்தரகர்கள்' கூடி நிற்பார்கள். அவர்கள் பெரும்பாலும் படிப்பறிவில்லாதவர்கள். வீடு நோக்கிச்செல்லும் தில்லையை அவர்கள் இடைமறித்து வீரகேசரியையும் ஈழநாட்டையும் கொடுத்து உரத்து வாசிக்கவைத்து நாட்டு நடப்புக்களை அறிந்துகொள்வார்கள். இதை தில்லை ஒரு நாள், இரண்டு நாள் அல்ல தினமும் செய்ய வேண்டி வந்தது. பத்திரிகைகளில் இருந்த சகல செய்திகளையும் ஒன்றுவிடாமல் வாசிக்கவேண்டும் என்று விடாப்பிடியாக நிர்பார்களாம் அந்த குழைத்தரகர்கள்.

தில்லை ஒன்றும் விருப்பமில்லாமல் அதைச் செய்யவு





மில்லை. செய்திகளை முழுமையாக வாசித்து முடிந்த கையோடு அந்த தரகர்கள் அருகில் தேநீர் கடையில் வடை, பகோடா போன்ற பலகாரங்களை வாங்கி தில்லைக்கு கொடுப்பார்களாம். சிறு வயதில் இருந்தே தனக்கு பத்திரிகை வாசிப்பில் அக்கறை வளர்ந்ததற்கு அந்த 'மந்திகைச்சந்தி செய்திவாசிப்பு' முக்கியமான ஒரு காரணம் என்று தில்லை தனது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் சந்தர்ப்பங்களில் சுவாரஸ்யமாக கூறுவதுண்டு.

பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்ட உடனடியாகவே தில்லை ஒரு செய்தியாளராக வேண்டும் என்பதைத் தவிர வேறு தொழிலில் நாட்டம் காட்டவில்லை. கண்டியில் இருந்து அப்போது வெளியாகிய 'செய்தி' என்ற பத்திரிகையின் நிருபராகவே செய்தித் துறையில் அவர் காலடி வைத்தார். அந்த பத்திரிகையின் ஆசிரியர் சில வருடங்களுக்கு முன்னர் காலமான பேராசிரியர் சோ.சந்திரசேகரனின் மனைவியின் தந்தையார்.

'செய்தி" நடத்திய கட்டுரைப்போட்டிக்கு தில்லை எழுதிய அனுப்பிய கட்டுரைக்கு பரிசு கிடைத்தது. 50 ரூபா பரிசைப் பெறுவதற்காக அவர் 1968 ஆண்டு கண்டிக்கு சென்றபோது அந்த பத்திரிகையின் செய்தி ஆசிரியராக இருந்த காலஞ்சென்ற கே.ஜி.மகாதேவா (பிறகு அவர் ஈழநாடு பத்திரிகையின் செய்தி ஆசிரியராக பல வருடங்கள் சேவையாற்றினார்) நிருபராகப் பணியாற்றுமாறு கேட்கவே தில்லை அடுத்த பேச்சின்றி இணங்கிக் கொண்டார். பத்திரிகைத்துறையில் அன்று பிரவேசித்த அவர் அதற்குப் பிறகு திரும்பிப் பார்க்கவில்லை. அரைநூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக நீண்டு இன்றும் தொடருகிறது அவரின் செய்திப்பணி.

பிறகு 1969 ஆம் ஆண்டில் ஈழநாடு பத்திரிகையின் நெல்லியடி செய்தியாளராக இணைந்துகொண்ட தில்லை மூன்று வருடங்களில் (1972) வீரகேசரியின் புலோலி செய்தியாளரானார். வடமராட்சியின் திக்கம் பகுதியைச் சேர்ந்த வழக்கறிஞர் வி.பி.சுந்தரலிங்கம் அன்றைய வீரகேசரி ஆசிரியர் கே. சிவப்பிரகாசத்துடன் தனக்கிருந்த நட்புறவை பயன்படுத்தி அந்த வாய்ப்பை தனக்கு பெற்றுக்கொடுத்ததாக நன்றியுணர்வுடன் தில்லை அடிக்கடி கூறுவார்.

1987 வரை புலோலி செய்தியாளராக பணியாற்றிய தில்லையை வடமராட்சி 'லிபரேசன் ஒப்பரேசன்' இராணுவ நடவடிக்கைக்கு பிறகு வீரகேசரியின் அன்றைய செய்தி ஆசிரியர் காலஞ் சென்ற செ.நடராஜா வடமராட்சி செய்தியாளராக கூடுதல் பொறுப்புகளுடன் பணியாற்றுமாறு பணித்தார். பிறகு யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றியதை அடுத்து 1997 ஆம் ஆண்டில் அன்றைய வடபகுதி போர்நிலைவரங்களுக்கு மத்தியில் யாழ்ப்பாண செய்தியாளராக அனுபவமும் பொறுப்பும் வாய்ந்த ஒருவரே செயற்படவேண்டும் என்று முடிவெடுத்த வீரகேசரி நிறுவனம் தில்லையை யாழ்நகரை தளமாகக்கொண்டு பணியாற்றும் யாழ்ப்பாண செய்தியாளராகவும் மாற்றியது. ஆபத்து நிறைந்த அந்த காலகட்டத்திலும், தில்லை எந்த தயக்கமும் இன்றி துணிவாற்றலுடன் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு 2009 வரை செம்மையாகப் பணியாற்றினார்.

இலங்கையின் உள்நாட்டுப்போர் பிராந்தியச் செய்தியாளர்களை தேசிய மட்டத்திலும் முக்கியத்துவத்தைக் கொண்டவர்களாக மாற்றியது. அன்றைய சூழ்நிலையில் அது தவிர்க்க முடியாதது. பிராந்தியங்களில் இடம்பெற்ற சம்பவங்களே போர்க்காலத்தில் பெரும்பாலும் தேசிய மட்டத்தில் மாத்திரமல்ல, வெளியுலகினதும் கவனத்துக்குரியவையாக இருந்தன. அந்த வேளையில் பிராந்திய செய்தியாளர்கள் உள்நாட்டு ஊடகங்களினால் மாத்திரமல்ல, சர்வதேச ஊடகங்களினாலும் பெரிதும் நாடப்பட்டவர்களாக இருந்தார்கள்.

அவர்களது செய்திகள் வடக்கு, கிழக்கில் போரின் விளைவான அவலங்களை உலகறியச்செய்தன. அத்தகைய பணியை இடர்மிகுந்த சூழ்நிலைக்கு மத்தியிலும், அர்ப்பணிப்புச் சிந்தையுடன் செய்த யாழ்ப்பாணச் செய்தியாளர்களில் தில்லைக்கு ஒரு முக்கிய இடமுண்டு. உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பிறகும் அவரின் பணி சுறுசுறுப்பாகத் தொடருகிறது.

1970 களின் பிற்பகுதியில் பருத்தித்துறையில் இடம்பெற்ற கமலம் கொலைவழக்கு, 1990 களின் பிற்பகுதியில் நடைபெற்ற செம்மணி கிருசாந்தி குமாரசாமி பாலியல் வல்லுறவு, கொலை வழக்கு விசாரணைகள் தொடர்பான செய்திகளை விரிவான முறையில் தில்லை அறிக்கையிட்டபோது முதலில் வீரகேசரியிலும் பின்னர் தினக்குரலிலும் நான் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அந்த வழக்கு விசாரணைகளின் தொகுப்புக்களை மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் வாசித்தார்கள். அந்த விசாரணைகள் பற்றிய செய்தி ஒரு நாள் பத்திரிகையில் வெளியாகத் தவறினாலும் உடனே வாசகர்களிடமிருந்து பத்திரிகை அலுவலகங்களுக்கு தொலைபேசி அழைப்பு வந்துவிடும். அந்தளவுக்கு சிறப்பான முறையில் தில்லை செய்திகளை தொகுத்தளித்தார்.

போர்க்கால கட்டத்தில் இடர்பாடுகளுக்கு மத்தியில் பணியாற்றிய பத்திரிகையாளர்களுக்கு இலங்கை தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் 2004 ஆம் ஆண்டில்





விருது வழங்கிக் கௌரவித்த போது யாழ்ப்பாண மாவட்டத்துக்கான அந்த விருது தில்லைக்கு கிடைத்தது. அடுத்து அதே ஆண்டு ஜூலை மாதம் இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் அமைப்பும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து கொழும்பில் நடத்துகின்ற பத்திரிகைத்துறைக்கான உயர்விருது விழாவிலும் தில்லை கௌரவிக்கப்பட்டார்.

அவரின் ஊடகத்துறைச் சேவையை பாராட்டி பருத்தித்துறை பிரதேச செயலகம் 2013 ஆம் ஆண்டில் 'கலைப்பருதி ' பட்டம் வழங்கியது. கல்வி அமைச்சின் விருது ஒன்றும் தில்லைக்கு கிடைத்தது.

பத்திரிகைத்துறைக்கு தங்களது வாழ்க்கையை அர்ப்பணித்த காலஞ்சென்ற வீரகேசரி யாழ்ப்பாணச் செய்தியாளர் செல்லத்துரை போன்று அனுபவசாலிகளின் வரிசையில் வைத்து ஒப்பிடக்கூடிய ஒருவரான தில்லையை எந்த நேரத்தில் நேரடியாகக் கண்டாலும் அல்லது தொலை பேசியில் தொடர்புகொண்டாலும், நலம் விசாரித்துவிட்டு அடுத்து உடனடியாக கதை பத்திரிகைத்துறைக்கு நகர்ந்து விடும். அந்த துறைக்கு தன்னாலான பணியை தொடர்ந் தும் செய்யவேண்டும் என்ற தில்லையின் ஆழமான ஆர் வத்தின் வெளிப்பாடே அது.

தில்லை மிகுந்த ஆரோக்கியத்துடன் நீடூழி வாழ்ந்து பத்திரிகைத்துறைப் பணியை செவ்வனே தொடர வேண்டும் என்று மனமார வாழ்த்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக முதல்வர் வேட்பாளராக பழனிசாமி பெயரை குறிப்பிடாத அமித்ஷா!

- சாரதா வி

## அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியில் என்ன நடக்கிறது?

தமிழ்நாட்டில் கூட்டணி ஆட்சி குறித்த தனது கருத்தை மீண்டும் தெளிவுபடக் கூறியுள்ள மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, முதல்வர் வேட்பாளர் பற்றி குறிப்பிட்டது சர்ச்சைக்கு வித்திட்டுள்ளது. அதிமுகவைச் சேர்ந்தவர்தான் முதல்வராக இருப்பார் என்று கூறிய அமித்ஷா, எடப்பாடி பழனிசாமியின் பெயரை குறிப்பிடாமல் தவிர்த்ததே அந்த சர்ச்சைக்கு காரணம்.

அதிமுக - பாஜக கூட்டணி மீண்டும் உருவானதில் இருந்தே பாஜகவின் இரும்புப் பிடியில் அதிமுக சிக்கிவிட்டதோ என்ற விமர்சனங்கள் எழுந்த நிலையில், அமித் ஷாவின் கருத்து பல்வேறு ஊகங்களுக்கு வித்திட்டது. அதேநேரத்தில், அதிமுகவுடன் மோதல் போக்கை கடைபிடித்த பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை மாற்றப்பட்டது கூட்டணியில் அதிமுகவுக்கு இருக்கும் செல்வாக்கிற்கு எடுத்துக்காட்டு என்று ஒரு சாரார் கூறுகின்றனர்.

2024 நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பே கூட்டணியை முறித்துக் கொண்ட அதிமுகவும் பாஜகவும் நாடாளுமன்ற தேர்தலை தனித்தனியாக எதிர்கொண்டன. கூட்டணி முறிந்து போன அறிவிப்பை கொண்டாடும் குரல்கள் இரு தரப்பிலுமே எழுந்தன. கிட்டத்தட்ட இரண்டு ஆண்டு கால பிரிவுக்கு பிறகு கடந்த ஏப்ரல் மாதம் அதிமுக - பாஜக கூட்டணி உயிர்ப்பிக்கப்பட்டது.

அது தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியமைக்கும் என்று அமித்ஷா தெரிவிக்க, பாஜகவும் பங்கேற்கும் கூட்டணி ஆட்சியா, அதிமுக தலைமையில் தனிப் பெரும்பான்மை ஆட்சியா? என்ற கேள்வி எழத் தொடங்கியது. கூட்டணி ஆட்சி என்ற பதம் தம்மை பலவீனப் படுத்தும் என்று கருதிய அதிமுக அந்த கருத்தில் இருந்து விலகி நின்றது.

பாஜகவுடனான கூட்டணி என்பது திமுகவுக்கு எதிரான வாக்குகளை ஒருங்கிணைக்கும் என்று அதிமுகவினர் நினைக்கிறார்கள். ஆனால் பாஜகவுடன் கொள்கை அணியாக அதை முன்னிறுத்துவதில் அதிமுகவிற்கு தயக்கங்கள் உள்ளன. கூட்டணியில் பெரிய கட்சியாக அதிமுக இருப்பதால், கூட்டணிக்கு தலைமையேற்று தொகுதிப் பங்கீடுகளை முடிவு செய்யும் என்று அதிமுக பொதுச் செயலாளர் கூறியிருந்தார்.

மதுரையில் இந்து முன்னணி அமைப்பின் சார்பில் நடைபெற்ற முருக பக்தர்கள் மாநாட்டில் அதிமுக முன்னாள் அமைச்சர்கள் பங்கெடுத்தார்கள். ஆனால், மாநாட்டின் நிகழ்ச்சிகள் தனது "மதச்சார்பற்ற", "திராவிட" அடையாளத்திற்கு ஆபத்தாகும் என்று கருதிய அவர்கள், முருக பக்தர்கள் என்ற முறையில் மட்டுமே மாநாட்டுக்குச் சென்ற தாக கூறி பின்வாங்கினர்.

முருக பக்தர்கள் மாநாடு நிகழ்வில் வெளியிடப்பட்ட வீடியோவை குறிப்பிட்டு, திருப்பத்தூரில் நடைபெற்ற அரசு விழாவில் பேசிய முதல்வர் மு.க. ஸ்டாலின் "பெரியார், அண்ணா போன்ற தலைவர்களை கொச்சைப்படுத்தி வீடியோ போடுகிறார்கள், அதை அதிமுகவினர் வேடிக்கைப் பார்க்கிறார்கள். அண்ணா பெயரை அதிமுக அடமானம் வைத்துவிட்டது" என்று விமர்சித்தார்.

ஊடகங்களில் பேசிய அதிமுக தலைவர்கள், "அந்த வீடியோவை வெளியிட்டிருக்கக் கூடாது, முருக பக்தர்கள்



மாநாட்டு தீர்மானங்களை அதிமுக ஏற்கவில்லை" என்று விளக்கம் அளித்தனர். இதே போன்றதொரு சர்ச்சையின் காரணமாகவே கூட்டணியில் இருந்து அதிமுக முன்பு வெளியேறியதாக அதிமுக துணை பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான உதயகுமார் கூறினார்.

இந்த நிலையில், தமிழ்நாட்டில் கூட்டணி ஆட்சி பற்றிய சர்ச்சையை மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா மீண்டும் தொடங்கி வைத்துள்ளார். தமிழ் நாளிதழ் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில், "எங்கள் தேசிய ஜனநாயக கூட்டணி நிச்சயம் அரசு அமைக்கும், அதில் பா.ஜனதா கட்சியின் பங்கு இருக்கும். தேர்தலில் நாங்கள் அ.தி.மு.க தலைமையின் கீழ் போட்டியிடுகிறோம். முதல் அமைச்சர் அதிமுகவிலிருந்து வருவார்." என்று தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் கூட்டணி ஆட்சிக்கு வாய்ப்பில்லை என்று எடப்பாடி பழனிசாமி முன்பே தெரிவித்திருந்த நிலையில், அமித்ஷா இப்படி பேசியிருப்பது அதிமுகவுக்கு அளிக்கப்படும் நிர்பந்தமாகவே அரசியல் அரங்கில் பார்க்கப்படுகிறது. முதல்வர் வேட்பாளராக எடப்பாடி பழனிசாமியின் பெயரை ஏன் நேரடியாக அவர் கூறவில்லை என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இருப்பினும் அமித்ஷா கூறியது கூட்டணி ஆட்சியே இல்லை என்று அதிமுகவினர் கூறி வருகின்றனர். பெயர் குறிப்பிட விரும்பாத அதிமுகவின் மூத்த தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஒருவர், "அமித் ஷா கூறியது கட்சிகளின் ஆதரவு பற்றியது, நிர்வாகத்தில் பங்கு அல்ல. எதிர்க்கட்சிகள் கிண்டல் செய்யும் நோக்கிலேயே இதை கையில் எடுத்துள்ளார்கள்" என்றார்.

அதிமுக மூத்த செய்தித் தொடர்பாளர் கோவை சத்யன், "அமித் ஷா மிக தெளிவாக கூறியுள்ளார் அதிமுக தான்



தமிழ்நாட்டில் கூட்டணிக்கு தலைமை தாங்குகிறது என்று. முதல்வர் வேட்பாளர் எடப்பாடி தான் என்று தெரிந்த பிறகு எதிர்க்கட்சிகள் வேண்டுமென்றே குழப்பம் செய்கின்றன." என்றார்.

ஜெயலலிதா மறைந்த போது ஆளுங் கட்சியாக வலுவாக இருந்த அதிமுக, உட்கட்சி பிரச்னைகள், தொடர் தேர்தல் தோல்விகள் என அரசியல் களத்தில் தடுமாறுகிறது. அதிமுக - பாஜக கூட்டணி முறிந்த பிறகு, 2024-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அதிமுக போட்டியிட்ட இடங்களில் 23.5 வீத வாக்குகளையும் பாஜக கூட்டணியாக 19.8 வீத வாக்குகளையும் பெற்றிருந்தது. அதிமுக 24 தொகுதிகளில் இரண்டாம் இடத்தையும் ஒன்பது தொகுதிகளில் மூன்றாம் இடத்தையும் பிடித்திருந்தது. அதே நேரம் பாஜக, ஒன்பது தொகுதிகளில் இரண்டாம் இடமும், 13 தொகுதிகளில் மூன்றாம்



இடமும் பிடித்திருந்தது. (தேர்தல் ஆணையத்தின் இணையதள புள்ளி விவரம்)

அதிமுக பொதுச் செயலாளராக உள்ள எடப்பாடி பழனிசாமியின் பலவீனமே பாஜகவுக்கு பலமாக அமைந்துள்ளது என்கிறார், திமுக மூத்த தலைவர் டி கே எஸ் இளங்கோவன். "பாஜகவுடனான கூட்டணி அதிமுக வுக்கு தேவையில்லை, எடப்பாடி பழனிசாமிக்கு தான் தேவைப்படுகிறது. அவரது மகன், நண்பர்கள் உட்பட பலரை காப்பாற்றுவதற்காக. களத்தில் அதிமுக தொண்டர்கள் இந்த கூட்டணி குறித்து சந்தோசப்படவில்லை. அவர்களுக்கு இந்த கூட்டணி வேண்டாம். ஜெயக்குமார் (முன்னாள் நிதியமைச்சர்) போன்ற தலைவர்கள் அதை வலுவாகவே கூறினார்கள்" என்று கூறுகிறார்.

அதே நேரம், பாஜகவுக்கு இந்த கூட்டணி அவசியமாகிறது என்கிறார் அவர். "நான்கு சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கும் இடத்தில் கூடுதலாக ஒரு உறுப்பினர் கிடைத்தால் கூட லாபம் தானே என்று பாஜக நினைக்கிறது" என்றார்.

பாராளுமன்றத்தில் சி.ஏ.ஏ சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்த அதிமுக, வக்பு வாரிய சட்ட திருத்தம், மும்மொழிக் கொள்கை, நீட் தேர்வு ஆகிய அம்சங்களில் பாஜகவுடன் முரண்பட்டது. முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தொடர்பாக அண்ணாமலை முன்வைத்த கருத்துக்கள், பெரியார், அண்ணா மீதான விமர்சனங்கள் அவ்வப்போது அதிமுகவுக்கு நெருடலை கொடுத்துள்ளது. இதனால் பாஜகவுடனான கூட்டணியை தொகுதி உடன்பாடு என்ற நிலையில் நிறுத்திக் கொள்ளவே அதிமுகவினர் விரும்புகிறார்கள். ஆனால், பாஜகவின் பிடி இறுக்கமாக இருப்பதால் அதிமுகவால் அதை உரக்கச் சொல்ல முடியவில்லை என்று விமர்சனங்கள் தொடர்கின்றன.

இந்த விமர்சனங்கள் குறித்து கேட்டபோது, "காங்கிரஸ் - திமுக இடையே கருத்து வேறுபாடுகள் இல்லையா? மேகதாது விவகாரத்தில் இரு கட்சிகளும் ஒரே நிலைப்பாடு கொண்டுள்ளனவா? காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் நீட் தேர்வு வேண்டாம் என்று தீர்மானம் நிறைவேற்றுவார்களா? நாங்கள் திமுக ஆட்சிக்கு முடிவு கட்டவே இந்த கூட்டணியை அமைத்துள்ளோம்" என்று கூறுகிறார் அதிமுகவின் தேசிய செய்தித் தொடர்பாளர் கோவை சத்யன்.

"இரண்டு முறை தொடர்ந்து ஆட்சியில் இருந்த பிறகு மூன்றாவது முறை ஆட்சியை குறைந்த வாக்குகள் வித்தியாசத்திலேயே இழந்தோம். இந்த முறை அப்படி எதுவும் நேர்ந்துவிடக் கூடாது என்று தான் கூட்டணி அமைத்துள்ளோம். 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலை விட, 2024ஆம் ஆண்டு தேர்தலில் எங்கள் வாக்கு சதவீதம் அதிகரித்திருந்தது. களத்தில் அதிமுகவும் பாஜகவும் கைகோர்த்து நிற்கின்றன" என்கிறார் அவர்.

"அதிமுக-பாஜக கூட்டணி வலுவடைந்து வருவதை திமுகவால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அதிமுகவுக்கு எந்த தர்ம சங்கடமான நிலையும் ஏற்படவில்லை." என்று கூறிய பாஜக மாநில பொதுச் செயலாளர் நாராயணன் திருப்பதி "சொந்த சின்னத்தில் போட்டியிட முடியாத விசிக, மிகக் குறைந்த தொகுதிகளை ஏற்றுக் கொண்ட கம்யூனிஸ்டுகள் மற்றும் காங்கிரஸ் தான், அதிமுக பாஜகவிடம் சிக்கியிருப்பதாக பேசுகிறார்கள்." என்று பதிலடி தருகிறார்.

அதிமுக - பாஜக கூட்டணியில் பாஜகவின் கை ஓங்கியுள்ளதா என்று கேட்டதற்கு பதிலளித்த கோவை சத்யன், "அதிமுக - பாஜக கூட்டணி வேண்டும் என்று யார் கேட்டது? பாஜக தானே. கடந்த முறை கூட்டணியில் அதிருப்தி ஏற்பட்ட போது என்ன நடந்தது? நாங் கள் வெளியேற தயங்க மாட்டோம் என்று அவர்களுக்கு தெரியும்" என்றார்.

(பிபிசி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரான் இஸ்ரேல் போரை நிறுத்திய ட்ரம்ப்?

# நேட்டோ உச்சி மாநாட்டில் முரண்பட்ட ட்ரம்ப்?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

நெதர்லாந்து ஹேக் நகரில் ஜூன் 23 முதல் நேட்டோ உச்சி மாநாடு நடைபெற்றது. இதன் போது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் கருத்துக்கு பல நாடுகளும் விமர்சனம் தெரிவித்தன.


உலகின் மிகப்பெரிய நேட்டோ பாதுகாப்பு அமைப்பை, ஒரு புதிய பாதுகாப்பு செலவீன அதிகரிப்பின் மூலம் ஒன்றிணைக்க ட்ரம்ப் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதனால் 32 உறுப்பினர்களுக்கு இடையேயான பிளவுகள் அதிகரிக்கவே முடியும் என்றும் அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

நெதர்லாந்து நேட்டோ உச்சி மாநாட்டில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப், பிரிட்டன் பிரதமர் கெயிர் ஸ்டார்மர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நேட்டோ பொதுச் செயலாளர் மார்க் ருட்டே, ஐரோப்பிய நாடுகள் மற்றும் கனடா, அமெரிக்காவைப் போலவே தங்கள் பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க அளவை பாதுகாப்புக்காக செலவிட ஒப்புக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையை முதலில் தெரிவித்து இருந்தார்.

ஆனால், ஸ்பெயின் அரசு, ஒவ்வொரு நாடும் தங்களது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5 வீதத்மதை பாதுகாப்புக்காக செலவிட வேண்டும் என்ற புதிய இலக்கை சாத்தியமற்றது என மறுத்தது. ட்ரம்ப் அந்த இலக்கை அடைய வேண்டும் வலியுறுத்தியுள்ளார். நேட்டோவில் எந்த ஒரு தீர்மானமான முடிவுக்கும் அனைத்து உறுப்பினர்களின் ஒப்புதல் தேவைப்படும்.

புதிய பாதுகாப்பு செலவீன அதிகரிப்பை அமெரிக்கா கடைபிடிக்க வேண்டிய அவசியமில்லை, ஆனால் மற்ற நாடுகள் கடைபிடிக்க வேண்டும் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார். அவர் ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சாஞ்சஸ் அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்தார். நேட்டோ ஸ்பெயினை சமாளிக்க வேண்டியிருக்கும், ஸ்பெயின் மிகவும் குறைவாக செலவிடும் நாடாக இருக்கிறது என்றும், கனடாவையும் குறைவாக செலவிடும் நாடு என ட்ரம்ப் விமர்சித்துள்ளார்.

இவ்வருட உச்சி மாநாட்டின் முக்கியக் கருப்பொருளாக உக்ரைனுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என ஐரோப்பிய நாடுகள் மற்றும் கனடா விரும்பின. ஆனால் ட்ரம்ப், உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலென்ஸ்கியின் கவனத்தை ஈர்க்காது, அவரை ஓரங்கட்டியதாகவும் கூறப்படுகிறது.



### வாஷிங்டனின் தந்திரோபாய போர் நிறுத்தம்:

வாஷிங்டன் அரசு ஈரானுடன் நேரடியாக சண்டையிடவில்லை, அதன் அணுசக்தி திட்டத்துடன் மட்டுமே போராடுகிறது என துணை அதிபர் ஜே. டி வான்சின் அறிக்கைகளை பார்த்தால் அமெரிக்க தற்போதைய போர் விவகாரத்தில் அழுத்தமாக காலடி எடுத்து வைக்க முடியவில்லை - அல்லது விரும்பவில்லை என்றே தோன்றுகிறது.


ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே முழு அளவிலான போர் நிறுத்த இணக்கப்பாடு ஒன்று எட்டப்பட்டிருப்பதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்திருக்கிறார். தீவிரமாக ஏவுகணை தாக்குதல்களை நடத்திய இரு நாடுகளுக்கும் இடையே போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்ததாகவும் தற்போது கூறப்படுகிறது.

வாஷிங்டன் மூலமாக தெஹ்ரான் - டெல் அவிவ் இடையே ஒரு மூலோபாய - தந்திரோபாய யுத்த நிறுத்தம் ஏற்பட்டது போல முதலில் தோன்றியது.

ஃபோர்டோ மற்றும் நடான்ஸில் உள்ள ஈரானிய அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்காவின் சமீபத்திய வான்வழித் தாக்குதலான 'ஆபரேஷன் மிட்நைட் ஹேமர்' நீண்டகால போருக்கு வழிவகுக்கும் என்று முன்பு எதிர்பார்க்கப்பட்டது. தற்போதய நிலையில் இந்த போர் நிறுத்தம் நீடிக்குமா என்பதனை எவராலும் தீர்மானிக்க முடியாது.



**இஸ்ரேலும் ஈரானும் போரை நிறுத்த விரும்பினர் என்றும், ஈரானின் அணு ஆயுதத் தளங்களை அமெரிக்கா முழுமையாக அழித்ததாகவும், அதன் பின்னரே போர் நிறுத்தம் ஏற்பட்டதாகவும் ட்ரம்ப் கூறியமைக்கு பெண்டகனிலும் விமர்சனங்கள் எழுந்துள்ளன**




தொடர்ந்து தீவிரமாக வளர்ந்து வரும் மத்திய கிழக்கு நெருக்கடியில் அமெரிக்க தலையீடு காரணமாக போர் மேலும் தீவிரமடையும் என்றும் கூறப்பட்டது. கட்டாரில் உள்ள அமெரிக்க இராணுவ தளங்கள் மீது ஈரான் பழிவாங்கும் தாக்குதல்களையும், ஹைஃபா மற்றும் டெல் அவிவ் போன்ற இஸ்ரேலிய நகரங்கள் மீது தொடர்ச்சியான வான்வழித் தாக்குதல்களையும் ஈரான் தொடர்ந்து நிகழ்த்தி வந்தது.

தற்போது வாஷிங்டன் மேற்பார்வை மூலமாக தெஹ்ரான் - டெல் அவிவ் இடையே ஒரு மூலோபாய யுத்த நிறுத்தம் ஆனது, புவிசார் அரசியலில் தீவிர தருணத்தை உருவாக்கியுள்ளது. ஆனால் இந்த போர் நிறுத்தம் ஒரு பரந்த போரின் தொடக்கமா, அல்லது கவனமாக வடிவமைக்கப்பட்ட யுத்த நிறுத்த உத்தியா என்றும் ஊகங்கள் உள்ளன.

### ஈரான் அணு ஆயுதம் அழியவில்லை:

ஈரானின் அணு ஆயுதத் திட்டம் முழுமையாக அழிக்கப்படவில்லை, சில மாதங்களுக்கு மட்டுமே தாமதமாகியிருக்கலாம் என அமெரிக்க உளவுத்துறையின் அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மேலும் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர், ஈரான் ஒப்பந்தத்தை மீறாவிட்டால் இஸ்ரேல் அதை மதிக்கும் என்று உறுதியளித்தார்.

அதேபோல், ஈரான் ஜனாதிபதி மசூத் பெஸ்ஸேகியன், இஸ்ரேல் மீறாவிட்டால் ஈரான் ஒப்பந்தத்தை பின்பற்றும் எனவும் கூறியுள்ளார். இதையடுத்து, இஸ்ரேலின் பென் குரியன் விமான நிலையமும், ஈரானின் வான்பரப்பும் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. இஸ்ரேல்-ஈரான் போர் நிறுத்தம் நீடிக்குமா என கேள்விகள் எழுந்துள்ளன. ஆனாலும் [illegible] போர் நிறுத்தம் தொடரும் என அமெரிக்க கூறுகிறது.

போர் நிறுத்தம் அமுலுக்கு வந்தாலும், இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையேயான பகை முழுமையாக தீரவில்லை. மத்திய கிழக்கில் ஓரளவு பதற்றம் குறைந்திருந்தாலும், எதிர்காலத்தில் இந்த ஒப்பந்தம் எவ்வளவு உறுதியாக இருக்கும் என்பது இன்னும் தெளிவாகவில்லை.

மத்திய கிழக்கு போர், ரஷ்ய - உக்ரைன் போர் காரணமாக ராணுவ முதலீடுகளை அதிகரிக்க நேட்டோ அமைப்பு முடிவு செய்துள்ளது. ஹேக் நகரில் ராணுவம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான முதலீடுகளில், ஒவ்வொரு நாடும் ஜி.டி.பி.யில் 5 சதவீதம் உயர்த்துவது என நேட்டோ அமைப்பு முடிவு செய்துள்ளது.

நேட்டோ எனப்படும் வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பில், அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த 32 நாடுகள் இடம்பெற்றுள்ளன. ராணுவ ஒத்துழைப்புக்கான இந்த அமைப்பு, ஐரோப்பாவில் உள்ள அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில், ராணுவத்துக்கான முதலீடுகளை அதிகரிக்க வேண்டும் என, நேட்டோ நாடுகளுக்கு, அமெரிக்கா சமீபத்தில் ஆலோசனை கூறியது.

ஐரோப்பாவைத் தவிர மற்ற பிராந்தியங்களில் உள்ள பாதுகாப்பு பிரச்னைகள் தொடர்பாகவும் அமெரிக்கா தற்போது தீவிரமாக ஆலோசனை நடத்தி வருகிறது.

தற்போதைய 2 வீத ஜி.டி.பி. செலவுக்கு பதிலாக 5 வீதமாக உயர்த்துவது குறித்து பல உறுப்பு நாடுகள் எதிர்மறையான கருத்துக்களை தெரிவித்துள்ளன.

கூட்டுக் கடமைகளை உறுதி செய்ய 2035ம் ஆண்டிற்குள் முக்கிய பாதுகாப்பு தேவைகள் மற்றும் ராணுவம் தொடர்பான செலவினங்களுக்காக உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதம் முதலீடு செய்வது கடினமான விடயம் என்றும் சில நாடுகள் தெரிவித்துள்ளன.

மேலும் இந்த அமைப்பில் உள்ள எந்த ஒரு நாட்டை எதிரி தாக்கினாலும், அது அனைத்து உறுப்பு நாடுகள் மீதான தாக்குதல் என கருதுவது எனவும் முடிவு செய்யப்பட்டு உள்ளது. ஆனாலும் 2035 காலக்கெடுவுக்குள் இலக்கை அடைய முடியாது எனவும், இது நியாயமற்றது எனவும் ஸ்பெயின் கூறியுள்ளது.

மேலும் நேட்டோவின் புதிய ராணுவ திட்டங்களில் ஒன்றான, எந்தவொரு தாக்குதலையும் எதிர்கொள்ள, 30 நாட்களில் 300,000 படைகளை களமிறக்கும் திட்டம் உள்ளது. ஆனால் நிபுணர்கள் அதற்கான வளங்களை உருவாக்க முடியாது என்று சந்தேகிக்கின்றனர்.




பெல்ஜியமும் இதேபோன்ற கருத்தை மறைமுகமாக தெரிவித்துள்ளது. ஸ்லோவேகியா, தனது பாதுகாப்பு செலவினங்களை தாங்களே தீர்மானிப்போம் என அறிவித்துள்ளது.

இந்த மாநாட்டில் இஸ்ரேல்-ஈரான் மோதல் மற்றும் ஈரானின் அணு ஆயுதத் திட்டம் பற்றியும் விவாதிக்கப்பட்டது. நேட்டோ தலைவர் மார்க் ருட்டே, ஈரான் அணு ஆயுதம் பெறுவதை தடுக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

2022ல் ரஷ்யா உக்ரைனை தாக்கியதன் பின்னர், நேட்டோ நாடுகள் பாரியளவு ஆயுத உதவிகளை வழங்கி வருகின்றன. உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டாலும், அவருக்கு முழுமையான ஆதரவு கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


நேட்டோ தொடர்த்து உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்குவது தொடர்பாக ட்ரம்ப் கடுமையாக சாடியுள்ளார்.

2024ல், உக்ரைனுக்கான இராணுவ உதவியில் ஐரோப்பிய நாடுகள் 60 வீத பங்குவைத்தன. இத்தகைய உதவிகள் எதிர்காலத்தில் தொடருமா என்பது சந்தேகமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமத்தில் களைகட்டும் பெரஹரா





வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலய வருடாந்த ஆடிவேல் விழா மஹோற்சவத்தின் இரண்டாம் நாள் பெரஹரா நேற்று முன்தினம் இரவு கோலாகலமாக நடைபெற்றது. (படங்கள்: - வி.ரி. சகாதேவராஜா)

# நீடித்திருக்கக்கூடிய மாற்றத்துக்கான...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊடாட்டத் தந்திரோபாயம் ஒன்றை அரசாங்கம் பின்பற்றக்கூடும் எனபதை உயர்ஸ்தானிகர் டேர்க் செம்மணிக்கு மேற்கொள்ளவிருக்கும் விஜயமும் பரந்தளவில் சமூகத்துடன் நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தையும் உணர்த்துகின்றன.

இலங்கையில் சர்வதேச நாணய நிதியத்தினதும் ஐக்கிய நாடுகளினதும் தலையீடுகளைப் பொறுத்தவரை, இலங்கை அரசாங்கமும் சமுதாயமும் வழங்கப்படக்கூடிய எந்தவொரு வாக்குறுதியையும் காணப்படக்கூடிய எந்தவொரு தீர்வையும் பேணிக்காக்க வேண்டிய தேவையிருக்கும். சர்வதேச நிறுவனங்கள் வரும் போகும். ஆனால், எடுக்கப்படுகின்ற தீர்ம்னங்களின் விளைவுகளுடன் இலங்கையர்களே வாழவேண்டியிருக்கும். அதனால், கையாளவேண்டிய பிரச்சி னைகளுக்கான இலங்கைத் தரப்புக்களுடன் (அரசியல் பிரதிநிதிகளும் சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்களும்) கலந்தாலோசித்து அவர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட வேண்டியது முக்கியமானதாகும்.

பாராளுமன்றத்திலும் சிவில் சமூகத்துடனும் நடத்தப்படும் பொதுப் பேச்சுவார்த்தைகள், கலந்தாலோசனைகளை ஆதாரமாகக் கொண்டவையாக சீர்திருத்தம் அமையாத பட்சத்தில், சீர்திருத்த நடவடிக்கைகள் நிலைபேறானவையாக இருக்கப்போவதில்லை. நோக்கத்தில் அக்கறையும் நேர்மையும் இருக்கிறது என்பதை வெளிக்கட்டுவதற்கு காணிகளை திருப்பிக் கையளித்தல், இராணுவமய நீக்கம், இழப்பீட்டு கொடுப்பனவுகளை அதிகரித்தல் போன்று உடனடியாக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் இருக்கின்றன. நிலைபேறான தீர்வுகள் வெளியாரின் திணிப்பில் இருந்து அல்ல உள்நாட்டு நியாயப்பாட்டில் இருந்தே வெளிக்கிளம்பமுடியும்.

# டொனால்ட் ட்ரம்பின் தான்தோன்றித்தனமான...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேறுவது குறித்து ஈரானிய தலைவர் பேசுகிறார்.

ஒரு கட்டத்துக்கு பிறகு ஈரானின் ஏவுகணைகளை இடைமறிப்பதில் இஸ்ரேல் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியதை அடுத்தே ஈரான் மீதான தாக்குதல்களில் இணைந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அமெரிக்காவுக்கு ஏற்பட்டதாக இராணுவ ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். 'அயன் டோம்" என்ற இஸ்ரேலின் நடமாடும் ஏவுகணை தடுப்புப் பொறிமுறை கணிசமானளவுக்கு பலவீனப்பட்டுவிட்டதாகவும் கூறப்படுகிறது. இஸ்ரேலைப் பொறுத்தவரை, நீண்டகாலத்துக்கு போர்களை நீடிக்க விடாமல் குறுகிய காலத்திற்குள் வெற்றிகளை அடையக்கூடிய தந்திரோபாயங்களையே அது கடைப்பிடித்து வந்திருக்கிறது.

டரம்பை பொறுத்தவரை, தனது ஆதரவுத் தளத்தை கட்டியெழுப்புவதற்கான ஒரு உபாயமாக அமெரிக்காவின் கடந்த காலப் போர்கள் மீதான தனது வெறுப்பையும் பயன்படுத்தினார். அதனால், நீண்டகாலப் போர்களில் அமெரிக்கப் படைகளை ஈடுபடுத்தும் எந்தவொரு முயற்சியும் அவருக்கு பாதகமாகவே அமையும். மத்திய கிழக்கு நெருக்கடியை கையாளுவதில் அவர் கடைப்பிடிக்கும் அணுகுமுறை ஏற்கெனவே அவரது ஆதரவாளர்கள் மத்தியில் எதிர்ப்பைக் கிளப்பியிருக்கிறது.

ஒரு புறத்தில், காசாவில் பாலஸ்தீனர்களின் இனப்படுகொலைக்கும் அயல்நாடுகள் மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்புகளுக்கும் உறுதியான ஆதரவை வழக்கிவரும் ட்ரம்ப், தன்னை ஒரு சமாதானத் தூதுவனாகவும் காட்டிக் கொள்ள பேராசைப்படுகிறார். காஷ்மீரில் தீவிரவாதிகளின் தாக்குதல்களில் குடிமக்கள் கொல்லப்பட்டதை அடுத்து இரு மாதங்களுக்கு முன்னர் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் மூண்ட போரை நிறுத்தியது தானே என்று ட்ரம்ப் அறிவித்தார். ஆனால், அதை இந்தியா ஏற்றுக் கொள்ளவில்லை. இரு நாடுகளினதும் இராணுவ உயர் மட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் காரணமாகவே மோதல்களை நிறுத்துவதற்கு இணங்கம் காணப்பட்டதாக இந்தியா அறிவித்தது.

ஆனால், கடந்த மே மாதத்தில் தனது முயற்சியின் விளைவாகவே போர்நிறுத்தத்துக்கு இந்தியாவும் பாகிஸ்தானும் இணங்கிக்கொண்டன என்று தொடர்ச்சியாக ட்ரம்ப் கூறிக்கொண்டேயிருக்கிறார். கடந்தவாரம் ஹேக் நகரில் நடைபெற்ற வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளின் (நேட்டோ) உச்சிமகாநாட்டின்போது செய்தியாளர்களை சந்தித்த அமெரிக்க ஜனாதிபதி தன்னால் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட இராணுவ மோதல்களில் அண்மைய இந்திய - பாகிஸ்தான் மோதலும் ஒன்று என்று கூறினார். இதுவரையில் அவ்வாறு அவர் பதினெட்டு தடவைகள் கூறியிருப்பதாக செய்திகள் வெளியாகின.

இது இவ்வாறிருக்க, அண்மைய இந்திய - பாகிஸ்தான் மோதல்களின்போது 'தீர்க்கமான இராஜதந்திர தலையீட்டைச்" செய்தமைக்காக 2026 நோபல் சமாதானப் பரிசுக்கு ட்ரம்பின் பெயரை முறைப்படி சிபாரிசு செய்வதற்கு தீர்மானித்திருப்பதாக பாகிஸ்தான் அரசாங்கம் கடந்த வாரம் அறிவித்த விசித்திரத்தையும் காணக்கூடியதாக இருந்தது. பாகிஸ்தான் இராணுவ தளபதி அசீம் முனிரை வெள்ளை மாளிகையில் ட்ரம்ப் சந்தித்த மூன்று நாட்களில் இஸ்லாமாபாத் இந்த அறிவிப்பை வெளியிட்டது. பாகிஸ்தானில் சிவில் அரசாங்கம் ஒன்று பதவியில் இருக்கும் போது அந்த நாட்டின் இராணுவ தளபதியை அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் சந்தித்த முதல் சந்தர்ப்பம் இதுவென்று கூறப்படுகிறது.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக ட்ரம்ப் இரண்டாவது தடவையாக பதவிக்கு வந்ததை தொடர்ந்து சர்வதேச விவகாரங்களில் அவர் கடைப்பிடித்துவரும் அணுகுமுறைகளும் அவற்றுக்கு மற்றைய நாடுகள் குறிப்பாக, சீனா, ரஷ்யா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற வல்லாதிக்க நாடுகள் வெளிக்காட்டுகின்ற பிரதிபலிப்புகளும் பல்துருவ உலக ஒழுங்கை கேள்விக்கு உள்ளாக்கியிருக்கிறது. வர்த்தக விவகாரங்களாக இருந்தாலென்ன இராணுவ விவகாரங்களாக இருந்தாலென்ன ட்ரம்பின் கொள்கை நிலைப்பாடுகளுக்கு உலகம் தன்னைப் பழக்கப்படுத்திக்கொள்கிறது போன்று தெரிகிறது.

ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான மோதல்கள் மத்திய கிழக்கை மாத்திரமல்ல, உலகின் ஏனைய பாகங்களையும் கூட அச்சுறுத்தியதால் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டமை உலகிற்கு நிம்மதியை கொடுத்திருக்கிறது. ஆனால், இஸ்ரேலும் அதற்கு உதவியாக அமெரிக்காவும் நினைத்த நேரத்தில் மீண்டும் தாக்குதல்களை நடத்துவதை எவராலும் தடுக்க முடியாத மிகவும் ஆபத்தான ஒரு நிலைவரம் தோன்றியிருக்கிறது.

மத்திய கிழக்கில் நீண்டகாலமாக அமெரிக்கா செலுத்திவரும் மேலாதிக்கத்துக்கு சவால் விடுக்கும் வகையில் அண்மைக்காலத்தில் சில இராஜதந்திர நகர்வுகளை மேற்கொண்ட சீனாவும் ரஷ்யாவும் ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல்களை நடத்தியபோது எதையும் செய்யமுடியாமல் இருந்தன. ஈரானிய அதியுயர் தலைவர் அலி காமெனியை தற்போதைக்கு கொலை செய்யும் திட்டம் தங்களுக்கு இல்லை என்று ட்ரம்ப் கூறிய வேளையிலும் ஈரானின் அணுத் திட்டங்களை தகர்ப்பது மாத்திரமல்ல, ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவருவதும் தங்களது இலக்கு என்று இஸ்ரேலிய பிரதமர் கூறிய வேளையிலும் உலகின் எந்தவொரு முக்கியமான நாடும் அதை கண்டனம் செய்யவில்லை.

தற்காப்பு என்பது ஏதோ இஸ்ரேலுக்கு மாத்திரமே பிரத்தியேகமான உரிமை போன்று அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் பேசுவதை உலகின் ஏனைய பிராந்திய நாடுகளும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன போன்று தெரிகிறது. காசாவை கற்காலத்துக்கு அனுப்பும் வகையில் சுமார் இரு வருடங்களாக இஸ்ரேல் துவம்சம் செய்வதை உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஒரு இனப்படுகொலை தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இஸ்ரேல் உண்மையில் இன்று தற்காப்பில் ஈடுபடும் நாடாக அன்றி, ஆக்கிரமிப்பு நாடாக மாறியிருக்கிறது. மனித குலத்துக்கு எதிரான குற்றங்களையும் போர்க்குற்றங்களையும் செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருக்கும் இஸ்ரேலிய பிரதமர் இன்று மத்திய கிழக்கின் பாதுகாப்பு நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிப்பராக மாறியிருக்கிறார்.

காசாவில் உள்ள இலட்சக்கணக்கான பாலஸ்தீனர்களை அயல் நாடுகளுக்கு அல்லது வேறு எங்காவது அனுப்பிவிட்டு அந்த பள்ளத்தாக்கை உல்லாசக் கடற்கரையாக மாற்றும் திட்டம் தன்னிடம் இருப்பதாக ட்ரம்ப் கூறுவதை உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது. பாலஸ்தீன நெருக்கடிக்கு இரு நாடுகள் என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட தீர்வு இனிமேலும் அமெரிக்காவின் நிலைப்பாடாக இருக்க வாய்ப்பில்லை என்றே தெரிகிறது. இன்று சட்டத்தை ஆதாரமாகக் கொண்ட ஒரு சர்வதேச முறைமை ஒன்று இருப்பதாக தெரியவில்லை.

2023 அக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பாரிய தாக்குதலை மேற்கொள்வதற்கு முன்னதாக இஸ்ரேல் மேற்கொள்ளக்கூடிய பதில் தாக்குதல்களுக்கு சர்வதேச சமூகம் எத்தகைய எதிர்வினையை காட்டும் என்பதைப் பற்றி ஹமாஸ் இயக்கம் நிச்சயாமாக சிந்தித்துப் பார்திருக்க வேண்டும். எளிதாகவே பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கும் ஒரு இனத்துக்காக போராடுகின்ற இயக்கம் அதன் அணுகுமுறைகள் குறித்து தூரநோக்குடன் சிந்தித்திருக்க வேண்டும்.

இன்று காசாவில் தினமும் நூற்றுக்கணக்கில் பாலஸ்தீனர்கள் படுகொலை செய்யப்படுவதை தடுக்க முடியாமல் உலகநாடுகள் வெறுமனே கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபை கவலை தெரிவிப்பதை தவிர, வேறு எதையும் செய்யமுடியாத கையறு நிலையில் இருக்கிறது. ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையால் மோதல் இடம்பெற்ற நாட்களில் காசாவை உலகம் கவனிக்கத்ததாக தெரியவில்லை.

இத்தகையதொரு சர்வதேச நிலைவரத்துக்கு மத்தியில் இலங்கையின் உள்நாட்டுப்போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைமீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களில் சம்பந்தப்பட்டவர்களை பொறுப்புக்கூறவைப்பதற்கு சர்வதேச சமூகத்தின் உதவியை நம்பியிருக்கும் தமிழ் அரசியல் சமுதாயம் சிந்தித்துப் பார்ப்பதற்கு பல விடயங்கள் இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஒழுங்கமைக்கப்பட்ட...

மோதல்கள் காரணமாக பிரிந்து சென்றுள்ளன.

சில கும்பல்கள் அதன் மூலம் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களையும் நடத்தி வருகின்றன - என்றார்.

இதற்கிடையில், தற்போதைய அரசாங்கம் அமைக்கப்பட்டதில் இருந்து, பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்காக கிட்டத்தட்ட 100 பொலிஸ் அதிகாரிகள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு முறைகேடுகள் தொடர்பாக முறைப்பாடுகள் மற்றும் ஆதாரங்கள் கிடைத்ததைத் தொடர்ந்து இந்த இடைநீக்கம் செய்யப்பட்டன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பலாலி...

அம்மன் ஆலய நிர்வாகத்தினர் கடந்த வருடத்தில் இருந்து இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த கோவிலை துப்பரவு செய்ததுடன் அதற்காக ஒன்றரை இலட்சம் ரூபா நிதியை செலவு செய்தனர்.

பின்னர், இராணுவத்தினர் தமது வாகனத்தின் ஊடாக, கோவில் நிர்வாகத்தினரை மாத்திரம் அழைத்துச் சென்று காண்பித்தனர்.

கடந்த 26 ஆம் திகதி மாலை குறித்த பாதையை விடுவித்து மக்கள் சிலர் வழிபாடுகளில் ஈடுபட்டு வந்தனர்.

ஆனால் நேற்று வழிபாடு மேற்கொள்ள ஆலயத்துக்கு சென்ற மக்களை இராணுவத்தினர் திருப்பி அனுப்பியுள்ளனர்.

உட் பகுதியில் கட்டுமானப் பணிகள் இடம்பெற்று வருவதால், வழிபட முடியாது எனத் திருப்பி அனுப்பப்பட்டதாக மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நேற்று வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளர் ச.சுகிர்தன், செயலாளர், ஆலயத் தலைவர் மற்றும் மக்கள் சென்ற போதும், ஏமாற்றத்துடன் திருப்பியுள்ளனர். (அ)

## செம்மணி...

நாட்டுக்கு வருகை தந்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க், யாழ்ப்பாணத்திலுள்ள செம்மணி சித்துபாத்தியில் கண்டறியப்பட்ட மனிதப்புதைகுழியைச் சென்று பார்வையிட்டிருந்தார்.

செம்மணி மனிதப்புதைகுழியானது கடந்த காலக் காயங்கள் மக்கள் மத்தியில் இன்னமும் ஆறாமல் இருப்பதை உணர்த்துவதாகவும், அம்மனிதப்புதைகுழி தொடர்பில் சர்வதேச தடயவியல் நிபுணர்களின் பங்களிப்புடன் அகழ்வுப் பணிகள் மற்றும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு உண்மை வெளிப்படுத்தப்படவேண்டும் எனவும் ஆணையாளர் வலியுறுத்தியிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இது குறித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் கனடாவின் ஒன்ராரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம்,

ஒன்ராரியோ மாகாணப் பாராளுமன்றத்தில் தமிழர்கள் செறிந்துவாழும் ஸ்காபரோ - ரக்பார்க் பகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர் என்ற ரீதியில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கின் உண்மை மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான வலியுறுத்தலை தானும் மீள வலியுறுத்துவதாகத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு 'ஆணையாளரின் செம்மணி மனிதப்புதைகுழி விஜயமானது தமிழினப்படுகொலை நிகழ்த்தப்பட்ட காலப்பகுதியில் பதிவான மிகமோசமான மீறல் சம்பவங்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற, சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்படவேண்டியதன் உடனடித் தேவைப்பாட்டைக் காண்பிகின்றது' எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## தமிழருக்கு...

மாகாண சபைத் தேர்தலை நடத்தவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். ஆனால் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்குரிய எவ்வித நடவடிக்கைகளும் விரைவாக முன்னெடுக்கப்படவில்லை.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் இந்த அரசாங்கத்துக்கு பாரியதொரு பின்னடைவை எதிர்க்கொண்டுள்ளது. இவ்வாறான பின்னணியின் மாகாண சபைத் தேர்தலை இந்த அரசாங்கம் விரைவாக நடத்தும் என்று எதிர்பார்க்க முடியாது.

நாட்டில் புரையோடியுள்ள இனப்பிரச்னைக்கு தீர்வாகவே மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தியது. மாகாண சபை முறைமைக்கு எதிராகவே மக்கள் விடுதலை முன்னணி செயற்பட்டது. பெரும்பான்மை மக்கள் மத்தியில் மாகாண சபை முறைமை குறித்து தவறான நிலைப்பாட்டை ஏற்படுத்தியது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்வதாக அரசாங்கம் ஆரம்பத்தில் குறிப்பிட்டது. ஆனால் தற்போது பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு மாற்றீடாக பிறிதொரு சட்டம் என்று அரசாங்கம் குறிப்பிடுகிறது.

நாட்டு மக்களுக்கு சிங்கள மொழியில் ஒன்றை குறிப்பிட்டு விட்டு, சர்வதேசத்துக்கு ஆங்கில மொழியில் பிறிதொன்றை குறிப்பிட்டு காலத்தை கடத்தும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது. தமிழர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை சட்டத்தின் பிரகாரம் அரசாங்கம் நிறைவேற்றவேண்டும் - என்றார். (அ)

## அரச...

மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பொது மக்களுக்கு நியாயமான விலையில் தரமான மருந்துகளை வழங்குவதே இதன் நோக்கமாகும் எனவும் அவர் கூறினார்.

கடந்த ஆண்டு முழுவதும் மருந்துகளை பெற்றுக்கொள்வதற்காக 68 விலைமனுக்களை மட்டுமே வெளியிட்டுள்ள அரச மருந்தகக் கூட்டுத்தாபனம், இந்த ஆண்டின் முதல் 05 மாதங்களில் 268 விலைமனுக்களை கோரியுள்ளதாக அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

இதன்படி, கொள்முதல் செயல்முறையை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிப்பதன் விளைவாக, அடுத்த ஆண்டு அரச மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்துகளை நிர்ணயிக்கப்பட்ட முறையிலும் உயர் தரத்துடனும் வழங்க முடியும் எனவும் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (அ)

## செம்மணியில்...

எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் 27 மனித எலும்புக் கூட்டு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 22 எலும்பு கூட்டு எச்சங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, செய்மதி படங்கள் ஊடாக அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் எதிர்வரும் நாட்களில் அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கு ஏதுவாக அப்பகுதிகளை துப்புரவு செய்யும் பணிகள் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன் மனிதப் புதைகுழி காணப்படும் இடத்தில் உள்ள மண்ணை பரிசோதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அகழ்வுப் பணிகளுக்கான செலவீன பாதீடாக 12 மில்லியன் ரூபா வழங்கப்பட்ட போதிலும், அதற்கு அண்மித்த தொகையே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# போதைக்கு அடிமையானோருக்காக மூன்று புதிய மத்திய நிலையங்கள்!

கொழும்பு, ஜூன் 29

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களின் புனர்வாழ்வுக்காக 03 புதிய மத்திய நிலையங்களை நிறுவ தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, குருநாகல் மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளில் அந்த மத்திய நிலையங்கள் நிறுவப்படவுள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் பணிப்பாளர் நாயகம் சுஜித் கொத்தலாவல தெரிவித்தார்.

ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையாவோரின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து செல்வதாகவும் அவர் கூறினார்.

நாட்டில் போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களை அடையாளம் காண்பதற்காக நாடுமுழுவதும் ஆய்வுகள் ஆரம்பிக்கப்படும் எனவும் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இளைஞர்கள் போதைப்பொருள் அச்சுறுத்தலுக்கு ஆளாகாமல் தடுக்க விழிப்புணர்வு திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# ஐ.நா. மனித உரிமை ஆணையர் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சின் தலையீடு ஏன்?

## சர்வதேச மன்னிப்புச் சபை கேள்வி

கொழும்பு, ஜூன் 29

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் உள்ளிட்ட உள்ளகக் கட்டமைப்புக்கள் உண்மையிலேயே சுயாதீனமானவை எனின், அவை வெளிவிவகார அமைச்சின் தலையீடு இன்றி ஆணையாளர் வோல்கர் டர்க்கை தனியாகச் சந்திப்பதற்கு இடமளிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லவா? என சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசியப் பிராந்திய ஆய்வாளர் த்யாகி ருவன் பத்திரண கேள்வி எழுப்பியுள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த திங்கட்கிழமை நாட்டுக்கு வருகைதந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் கடந்த செவ்வாய்க் கிழமை நீதியமைச்சு, காணாமல் போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் ஆகியவற்றின் அதிகாரிகளை வெளிவிவகார அமைச்சில் சந்தித்து பொறுப்புக்கூறலுக்கான உள்ளகப் பொறிமுறை மற்றும் நல்லிணக்க செயன்முறை குறித்து விரிவாகக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பு தொடர்பில் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில்




பதிவொன்றைச் செய்திருக்கும் சர்வதேச மன்னிப்புச்சபையின் தெற்காசியப் பிராந்திய ஆய்வாளர் த்யாகி ருவன் பத்திரண, காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் உள்ளிட்ட உள்ளகக் கட்டமைப்புக்கள் உண்மையிலேயே சுயாதீனமானவை எனின், அவை வெளிவிவகார அமைச்சின் தலையீடு இன்றி ஆணையாளர் வோல்கர் டர்க்கை தனியாகச் சந்திப்பதற்கு இடமளிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லவா? எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

மாறாக வெளிவிவகார அமைச்சு அல்லது நீதியமைச்சு உள்ளடங்களாக அரசாங்கத்தின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் நிகழக்கூடிய சந்திப்பில் தமது கட்டமைப்புக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆதரவு குறித்தோ அல்லது போதியளவு ஆதரவு வழங்கப்படாமை குறித்தோ காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் உள்ளிட்ட கட்டமைப்புக்களின் அதிகாரிகளால் எவ்வாறு பிரஸ்தாபிக்கமுடியும் என்றும் த்யாகி ருவன்பத்திரண விசனம் வெளியிட்டுள்ளார். (அ)

## அரசிடம்...

தெரிவிக்கின்றன.

கொழும்பு - கண்டி அதிவேக நெடுஞ்சாலையின் கடவத்தை - மிரிகம பிரிவின் கட்டுமானத் திட்டம், கட்டுநாயக்க விமான நிலையத்தின் புதிய முனையத்தின் கட்டுமானத் திட்டம் மற்றும் கொஹூவல மேம்பாலத்தின் கட்டுமானத் திட்டத்திற்காக இந்த இழப்பீடு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சீன எம்.சி.சி. நிறுவனம், ஜப்பானிய தைசே நிறுவனம் மற்றும் இலங்கை அணுகல் நிறுவனம் ஆகியவை தொடர்புடைய இழப்பீட்டு கோரிக்கைகளை முன்வைத்துள்ளன.

அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணித்த சீன நிறுவனம் அன்றில் இருந்து ஒரு நாளைக்கு 2 மில்லியன் இலங்கை ரூபாய் இழப்பீடு கோரி வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இழப்பீடு வழங்குவதை விட மிகவும் முக்கியமான விடயம் என்னவெனில், இந்தத் திட்டங்களை மீண்டும் தொடங்குவதற்கு ஏற்படும் செலவுக்கான வட்டி விகிதத்தை முன்னர் நிர்ணயிக்கப்பட்ட 2 வீதத்திலிருந்து அதிகரிக்கவேண்டும் என்று சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அரசாங்கத்திடம் தெரிவித்திருப்பதுதான்.

அதன்படி, அந்தத் திட்டங்களுக்காகப் பெறப்பட்ட கடன்களுக்கான வட்டிச் செலவும் கணிசமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது - என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## இலங்கையில்...

விலகிச் செல்ல முடியாது. காணாமல் போனவர்களுக்கான நீதி ஒரு சுயாதீனமான சர்வ தேச விசாரணையையும் பொறுப்புக்கூறலையும் கோருகின்றது - என்று தெரிவித்துள்ளார். (அ)

## ஆசிய...

வகையிலான தீர்மானங்களை நடைமுறைப்படுத்த வேண்டாம் என அந்த கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும் அந்த கடிதத்துக்கு அரசாங்கத்திடமிருந்து எவ்வித பதிலும் வழங்கப்படவில்லை என்றும் கலாநிதி ஹர்ஷ தெரிவித்திருந்தார். இந்நிலையிலேயே அமைச்சர் குமார ஜெயக்கொடி இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்-

அந்த நிறுவனங்கள் இவ்வாறு செயற்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. அவற்றின் இந்த கூட்டு கடிதம் இராஜதந்திரமற்ற அணுகுமுறையாகும். அவை இந்த விடயத்தை இதனை விட சிறப்பான இராஜதந்திர ரீதியில் கையாண்டிருக்க வேண்டும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

## கீரிச் சம்பா அரிசிக்கு தட்டுப்பாடு இல்லை!

கொழும்பு, ஜுன் 29

சந்தையில், கீரிச் சம்பா அரிசிக்கு தட்டுப்பாடு இல்லை என, மரதகஹமுலா அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் பி.கே. ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

கீரிச் சம்பாவின் விலை உயர்வால், வியாபாரிகள் அரிசியை பதுக்கி வைத்திருகின்றனர்.

இதன் காரணமாக கீரிச் சம்பா அரிசிக்கு பற்றாக் குறை ஏற்படுகின்றது.

இந்த நிலையில், மக்கள் பாதிக்கப்படுகின்றனர். என மரதகஹமுலா அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் பி.கே. ரஞ்சித் குறிப்பிட்டுள்ளார். (அ)

## பாராளுமன்றம் நாளை கூடும்

கொழும்பு, ஜுன் 29

அவசர கூட்டத்துக்காக பாராளுமன்றம் நாலை திங்கட்கிழமை கூடவுள்ளதாக சபாநாயகர் அறிவித்துள்ளார்.

பிரதமர் ஹரிணி அமரசூரியவின் வேண்டுகோளின் பேரில் நிலையியற் கட்டளைகளின் 16 ஆம் நிலையியற் கட்டளையின்படி, அவசரக் கூட்டம் கூட்டப்படும் என வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வரவு-செலவுத்திட்ட தேவையை நிறைவேற்றுவதற்காக இந்த அவசரக் கூட்டம் கூட்டப்படுவதாக பாராளுமன்றத்தின் பிரதி செயலாளர் நாயகமும், பணியாளர்கள் பிரிவின் தலைவருமான சமிந்த குலரத்ன தெரிவித்துள்ளார். (அ)

## விபத்தில் 7 பேர் காயம்

கொழும்பு, ஜுன் 29

கொழும்பு - கண்டி பிரதான வீதியில், உத்துவன்கந்த பகுதியில் நேற்று அதிகாலை 5.00 மணியளவில் இடம் பெற்ற விபத்தில் 7 பேர் காயமடைந்துள்ளனர்.

இரண்டு லொறிகள் ஒன்றுடன் ஒன்று மோதி, விபத்துச் சம்பவித்துள்ளது.

இதனால் இரண்டு குழந்தைகள் உட்பட 7 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ)

## கனடாவில் இருந்து வந்த போதைப்பொருள் பறிமுதல்

கொழும்பு, ஜுன் 29

கனடாவில் இருந்து நாட்டுக் கொண்டு வரப்பட்ட 50 மில்லியன் ரூபாய் பெறுமதியான போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சுங்க அதிகாரிகள் இந்த போதைப்பொருளை பறிமுதல் செய்துள்ளனர்.

இதன்படி, 862 கிராம் குஷ் ரக போதைப்பொருளும் 4 கிலோ 14 கிராம் நிறைக் கொண்ட ஹஷிஷ் போதைப் பொருட்களே பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (அ)

## சமூக ஊடக விளம்பரம் மூலம் நாட்டில் மோசடிகள் அதிகரிப்பு

கொழும்பு, ஜுன் 29

சமூக ஊடகங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப் படும் குற்றங்களுக்கு இலக்காவோரின் எண்ணிக்கை, சடுதியாக அதிகரித்து வருவதை அவதானிக்க கூடியதாக உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நடத்திய விசாரணையில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

வீட்டிலிருந்தே பணியாற்றி பணம் சம்பாதிக்கக் கூடிய தொழிலொன்றில் பணத்தை முதலீடு செய்யுமாறு, விளம்பரப்படுத்துவதன் மூலம் இந்த மோசடிகள் இடம்பெறுவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, சமூக ஊடகங்களில் அறிமுகம் இல்லாத வர்களால் பகிரப்படும் இணையத்தள இணைப்புகளை அணுகுவதைத் தவிர்க்குமாறும், வங்கிக் கணக்கு விவரங்கள் உள்ளிட்ட தனிப்பட்ட தரவுகளை எவருக்கும் வழங்க வேண்டாம் எனவும் பொலிஸார் கோரியுள்ளனர். (அ)

# பஸ் சாரதிகள் ஆசனப்பட்டி அணிவது இனிமேல் கட்டாயம்

### ஜூலை முதல் நடைமுறைக்கு

கொழும்பு, ஜுன் 29

**எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல், இலங்கை போக்குவரத்து சபை உள்ளிட்ட அனைத்து பயணிகள் பஸ் சாரதிகளும், ஆசனப்பட்டிகள் அணிவதைக் கட்டாயமாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் பொறியிலாளர் பி.ஏ.சந்திரபால தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கமாக, ஆசனப் பட்டி அணிய வேண்டியதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்துள்ளோம்.

வீதி பாதுகாப்பு தொடர்பான முறைமைகளை பின்பற்றும்போது அரசாங்கத்துக்கு பாரிய செலவு ஏற்படுகின்றது.

அதேநேரம், வீதி பாதுகாப்பு முறைமைகளை உரிய வகையில் பின்பற்றாமை காரணமாக ஆபத்தான சம்பவங்கள் பதிவாகின்றன.

இது எளிமையான விடயம் என்றாலும், பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்படும் சேதங்களுக்கு அரசாங்கம் பெரும் செலவை ஏற்கவேண்டும்.

ஆசனப்பட்டி அணிவதன் மூலம் பாரிய விபத்துக்களை தடுத்துக் கொள்ள முடியும். பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வீதி பாதுகாப்பில் சர்வதேச தரத்தைப் பேணுவதற்கான முயற்சியில் இது முக்கியமானது - என்றார். (அ)

# விவசாயப் பிரதி அமைச்சர் சுஷில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு விஜயம்

முல்லைத்தீவு, ஜுன் 29

விவசாய பிரதி அமைச்சர் சுஷில் ரணசிங்க தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில், நேற்று விசேட கலந்துரையாடல் இடம் பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாய செய்கையை மேம்படுத்தும் வகையிலும் உற்பத்திகளை சந்தைப் படுத்தும் வகையிலும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமா மகேஸ்வரனின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக பண்டார வன்னியன் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். திலகநாதன், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு, வெலிஓயா ஆகியவற்றின் பிரதேச செயலாளர்கள்,

கமநல அதிகாரி, நீர்ப்பாசன அதிகாரி, விவசாய திணைக்கள அதிகாரி, துறை சார் அதிகாரிகள் என பலர் பங்கேற்றனர். (அ)

# கல்வி நவீனமயமாக்கல் திட்டத்துக்கு உலக வங்கி மேலும் 50 மில். டொலர்!

கொழும்பு, ஜுன் 29

நாட்டின் இலவச கல்வி நவீனமயமாக்கல் திட்டத்துக்கு மேலதிகமாக 50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை உலக வங்கி அங்கீகரித்துள்ளது.

இந்த நிதியுதவி நாடு முழுவதும் சுமார் 500,000 மாணவர்கள் மற்றும் 150,000ஆசிரியர்களுக்கு பயனளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கல்வி சீர்திருத்தம், கற்பித்தல் தரம் மேம்படுத்தல், பாடசாலை வசதிகளை மேம்படுத்தல், மாணவர் நல் வாழ்வு மேம்படுததல் போன்ற திட்டங்களுக்கு இந்த நிதி உதவும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

விசேடமாக வசதி குறைந்த கிராமப்புற மற்றும் பெருந்தோட்டப் பகுதிகளுக்கு உதவும் வகையில் இந்த நிதி வழங்கப்படவுள்ளது.

ஆசிரியர் பயிற்சியை நவீனமயமாக்குதல் மற்றும் டிஜிற்றல் கற்றலை ஊக்குவித்தல், சுத்தமான நீர், மாத விடாய் சுகாதாரம் மற்றும் மனநல ஆதரவு உள்ளிட்ட பாடசாலை சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து திட்டங்களை விரிவுபடுத்துதல் என்பனவற்றை இலக்காக கொண்டும் இந்த திட்டம் செயற்படுத்தப்படுகிறது. (அ)

## இரு மீன்பிடிப் படகுகள் விபத்து; பல மீனவர்களை காணவில்லை

கொழும்பு, ஜுன் 29

நாட்டின் கடற்பரப்பில் நேற்றுச் சனிக்கிழமை காலை இரண்டு படகு விபத்துக்கள் நிகழ்ந்துள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ள நிலையில், விபத்துக்களின் விளைவாக பல மீனவர்கள் காணாமல் போயுள்ளனர். அவர்களைத் தேடும் பணிகள் நடைபெற்று வருவதாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு இந்தச் சம்பவங்கள் குறித்து தீவிர கவனம் செலுத்தி வருவதாகவும், காணாமல் போன மீனவர்களைக் கண்டுபிடிப்பதற்கும், தொடர்புடைய நிவாரணங்களை வழங்குவதற்கும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்றும் மீன்பிடி சமூகத்தின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்காக உறுதியுடன் இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இத்தகைய விபத்துக்களை குறைப்பதற்கான தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும் என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹாவத்த தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மாத்தறை மாவட்டத்தின் தேவேந்திரமுனை துறைமுகத்திலிருந்து மீன்பிடி நடவடிக்கைகளுக்காகச் சென்ற எம். டி. ஆர். 263 தினேஷ் 4 என்ற பலநாள் மீன்பிடிப் படகு, ஒரு வர்த்தகக் கப்பலுடன் மோதியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இந்தப் படகில் ஐந்து மீனவர்கள் இருந்தனர். படகின் மேல் பகுதியில் இருந்த ஒரு மீனவர் மீட்கப்பட்டு, கடற்படையினரால் கரைக்கு கொண்டு வரப்பட்டுள்ளார்.

மற்ற நான்கு பேரையும் தேடும் பணிகளை இலங்கை கடற்படையினர் நேற்றுக் காலை 07: 30 மணி முதல் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தச் சம்பவம் கரையிலிருந்து சுமார் 20 கடல் மைல்கள் தொலைவில், வர்த்தக கப்பல்கள் செல்லும் பாதையில் நிகழ்ந்துள்ளது.

மீன்பிடிப் படகின் கீழ் பகுதியில் ஏனைய மீனவர்கள் இருக்கிறார்களா என்ற சந்தேகத்தின் பேரில், கடற்படையினர் சுழியோடிகளுடன் இணைந்து அப் பகுதியில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, மற்ற மீனவர்களை தேடும் பணிகளை மேற்கொண்டு வருவதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹாவத்த உறுதிப்படுத்தினார்.

இதேவேளை களுத்துறை மாவட்டத்தின் பேருவளை, மொரகல்லை பிரதேசத்தில் நேற்றுக் காலை இரண்டு மீனவர்கள் சென்ற படகு விபத்துக்குள்ளானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் இல்லாமல் படகு கடலில் காணப்பட்டது, அது தற்போது கரைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. காணாமல் போன இரண்டு மீனவர்களையும் தேடும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த சம்பவம் கரையிலிருந்து மிக அருகில் நிகழ்ந்துள்ளது.

மீனவர்கள் அடையாளம் காணப்படவில்லை என்றாலும், இரண்டு மீனவர்கள் இந்தப் படகில் சென்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இரண்டு மீனவர்களையும் கண்டுபிடிப்பதற்கான முழு முயற்சியும் எடுக்கப்பட்டு வருவதாக பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org